



# முகில்வண்ணன்

## நினைவு மலர்



வெளியீடு :

நல்முனை நெற் ஊடகவலையமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு மலர்



மலர்வு : 17.12.1942 உதிர்வு : 17.09.2020

## உயர்திரு. வேலுப்பிள்ளை சண்முகநாதன்

("முகில்வண்ணன்" - ஓய்வுநிலை பொறியியலாளர்)

ஆண்டு சார்வரி அமாவாசை திதியில்
நீண்ட புகழோன் சண்முகநாதன் - மாண்புடனே
புரட்டாதி வியாழன் பதினாறு கிருஷ்ணபக்ஷமதில்
ஆண்டவன் [illegible] அமைதியுற!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகில்வண்ணன் - வாழ்வியல் சங்கிரகம்.

நாடறிந்த எழுத்தாளர் கலாபூசணம் வித்தகர் முகில்வண்ணன் அவர்கள் பற்றிய வாழ்வியல் சரிதத்தை இத்தகைய சுருக்கவடிவில் தருவதில் எமது கல்முனைநெற் ஊடக வலையமைப்பு பெருமையடைகிறது.

திரு முகில்வண்ணன் அவர்கள் கல்முனை, பாண்டிருப்பைச் சேர்ந்த திரு வேலுப்பிள்ளை அவர்களுக்கும் மாரிமுத்து அவர்களுக்கும் ஆறாவது மகனாக 17.12.1942 இல் பிறந்தார். இயற்பெயர் திரு. வே. சண்முகநாதன், வீட்டுப் பெயர் கணேஷ். பிரதான புனைபெயர் முகில்வண்ணன்.

முகில்வண்ணன் அவர்கள் ஒரு சகோதரன் ஏழுசகோதரிகளுடன் பிறந்தவர். அழகம்மா கிருஸ்ணபிள்ளை, தங்கராசா வேலுப்பிள்ளை, கனகசுந்தரம் பரநிருபசிங்கம், பூமணி வேதாரணியம், தங்கப்பாக்கியம் வடிவேல், புவனேஸ்வரி இராசையா, லீலாவதி மகேஸ்வரன், நடேஸ்வரி சுதர்சன் ஆகியோரே சகோதரர்களாவர்.

ஆரம்பக்கல்வி பாண்டிருப்பு மெதடிஸ்த மிஷன் கலவன் பாடசாலையில். இடைநிலை கல்வி கல்முனை பற்றிமாக் கல்லூரியில். விவசாயப் பயிற்சி கரடியனாறு விவசாயப் பாடசாலையில். ஒரு வருடம் தொழிற் கல்வி இரத்மலானையில் - தொழிற்பயிற்சி கொழும்பில் பல இடங்களில் இடம்பெற்றது. வேலை செய்தபோது சிங்களத்தில் சாதாரண தரத்துக்குச் சமமான சித்தி பெற்றார்.

அவர் பாண்டிருப்பைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கண்மணி என்பாரை 1966இல் வாழ்க்கைத் துணைவியாக்கி மூன்று மகவுகளைப் பெற்றெடுத்தார். மகள் ரோகினி சண்முகநாதன், மகன் பிரேம்நந்தகுமார் சண்முகநாதன், மகன் சரேன்நந்தகுமார் சண்முகநாதன். இவர்கள் மூவரும் லண்டன், பிரான்ஸ் ஆகிய புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

அவர் தம் பேரப்பிள்ளைகளான இலக்கியா ஸ்ருதி ரிஷிகேஸ் ஸ்ம்ருதி ருக்ஷான் லக்ஷானி ஸிபாணி ஆகியோரும் அங்குதான் வாழ்ந்து வருகின்றனர். 2018இல் முகில்வண்ணன் அவர்களது துணைவியார் கண்மணி தேகவியோகமடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துலகப் பிரவேசம் பாடசாலை பத்திரிகையில் 1959ல் 17ம் வயதில் இடம்பெற்றது. தேசியப்பத்திரிகையில் 1961இல் தினகரன் மூலம் அறிமுகமானார். "மழலைப்புலவர்" என்னும் பெயரில் சிறுவர் விடயங்களை எழுதி வந்திருக்கிறார். வேறு சில புனைபெயர்களிலும் சொந்தப் பெயரில் எழுதியிருக்கிறார்.

இவர் எழுதிய விடயங்களாக சிறுகதை, கவிதை, கட்டுரை (சமயம், இலக்கியம், அறிவியல்), நாவல், குறுநாவல், மெல்லிசை பாடல்கள், சிறுவர் சிறுகதைகள், சிறுவர் நவீனம் சிறுவர் கவிதைகள், பயணக்கட்டுரை, வரலாறு, மொழிபெயர்ப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம்.

1965ல் வேலைக்குச் சேர்ந்த அவர் 1982ல் வேலையை விட்டு விலக வேண்டி ஏற்பட்டது. அப்போது சவூதி அரேபியாவுக்கு மதிப்பீட்டாளராகச் சென்றார். திரும்பி வந்து கல்முனை சர்வோதயத்தில் திட்ட இணைப்பாளராக வேலை செய்தார். அதன் பின்னர் சுனாமியின் பின்னரான வேலைத் திட்டத்தில் பொறியியலாளராகச் சேர்ந்து கொழும்பு லேடன் கம்பனி (குழுமம்)யில் சேர்ந்து சில வருடங்கள் பணியாற்றினார்.

அவர் பெற்ற விருதுகள் :

கலாபூஷணம், சாமஸ்ரீ, தேசமான்ய, இரத்தின தீபம், இலக்கிய தீபம், வித்தகர்.

பட்டங்கள் :

வெகுசனத் தொடர்புத் துறையில் டிப்ளோமா
சட்டத்தில் டிப்ளோமா
அகில இலங்கை சமாதான நீதவான்

பதவிகள்

- தொழில்நுட்பவியலாளர் - பொது வேலைகள் திணைக்களம்
- பொறியியலாளர் - (ஓய்வுநிலை) கட்டிடங்கள் திணைக்களம்
- பொறியியலாளர் - (ஓய்வுநிலை) லேடன் குரூப் கம்பனி
- தொழில் நுட்ப ஆலோசகர் - NHDA (தே.வீ.அ.சபை)
- திட்ட இணைப்பாளர் - சர்வோதயம், கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உதவிப்பணிப்பாளர் - மனித உரிமை சமாதான நீதவான் மன்றம் (கல்முனைப் பிரதேச சபை)
- தலைவர் - சிக்கன கடன் வ.கூ.சங்கம், பாண்டிருப்பு
- பொருளாளர் - கல்முனை தமிழ் சங்கம்
- கணக்காய்வாளர் - சிக்கன கூட்டுறவு சங்கங்களின் சமாசம், கல்முனை
- இணைப்பாளர் - நாவலர் கோட்டம், கல்முனை
- முன்னாள் தலைவர் ஸ்ரீ திரௌபதி அம்மன் ஆலயம், மாணிக்கப் பிள்ளையார் ஆலய தேவஸ்தானம், பாண்டிருப்பு
- செயலாளர் - மலையக கலை கலாசார சங்கம் (கிழக்குக் காரியாலயம்), கண்டி
- பொருளாளர்- அம்பாறை மாவட்ட தமிழ்எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவை.

பரிசு :

- சிறந்த சிறுகதை எழுத்தாளர் 1994 இல்

தொடராக வெளிவந்த ஆக்கங்கள்

- சிங்கராஜா - சிறுவர் நாவல் 1968 - 1969 ராதா
- மணற்கோலம் - நாவல் 1969 - ராதா
- ஆனந்தக் கண்ணீர் - குறுநாவல் 1971 - மித்திரன்
- பளிங்குமாளிகை - சிறுவர் நாவல் 1985 - தினகரன்
- நினைத்தது ஒன்று - குறுநாவல் 1986 - தினகரன்
- செல்லக்கிளி - நாவல் 1990 - தினகரன்
- உன்னைக்காணாத நெஞ்சு - நாவல் 1997 - வீரகேசரி
- அஞ்ஞாதவாசம் - குறுநாவல் 1998 - நவமணி
- சவுதி அரேபியாவில் ஒரு சஞ்சாரம் - பயணக்கட்டுரை - சிந்தாமணி
- இளவரசன் - சிறு நாவல் 2012 - தினகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்த நூல்கள்

- அவள் ஒரு தமிழ்ப் பெண் - சிறுகதைகள்
- ஆனந்தக்கண்ணீர் - இருகுறுநாவல்கள்
- இனியும் நான் இராமன் தான் - சிறுகதைகள்
- செல்லக்கிளி - நாவல்
- முருகனருள் - கவிதை
- ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயம்- ஆலய வரலாறு
- பொன்விழா மலர் - எழுத்துலகில் 50 ஆண்டுகள்

மொழிபெயர்ப்பில் பங்களிப்பு : (பிரம்ம குமாரிகள் ஆன்மீக நூல்கள்)

- இன்றைய நல்ல நாளுக்கான சிந்தனைகள் .
- இறைவன் - எனக்கும் இனியவன்
- ஆதி தேவி ஜெகதாம்பா சரஸ்வதி
- ஆத்மாவின் இறக்கைகள்
- ஆன்மீக வெற்றிக்கதைகள்
- இறத்தலும் இறப்பும்
- இராஜயோக தியான பாடத்திட்டம்

இவை தவிர ஏனைய கதை, கவிதை, கட்டுரைகள் 1961 இல் இருந்து எழுதப்பட்டவை தொகுக்கப்பட்டு தரப்பட்டுள்ளது. இவை படிப்படியாக நூலாக்கம் செய்யப்பட இருந்தன.

- பொங்கல் கவிதைகள் - கவிதை
- பாவை நோன்பு - கட்டுரை
- அஞ்ஞாதவாசம் - இரு குறுநாவல்கள்
- சிங்கராஜா - சிறுவர் நாவல்
- பளிங்கு மாளிகை - சிறுவர் நவீனம்
- பாதாளக்கிணறு - சிறுவர் நவீனம்
- கிறிஸ்மஸ் பரிசு - சிறுவர் நவீனம்
- பூங்கவிதைகள் - சிறுவர் பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொன் மலர்கள் - சிறுவர் கவிதைகள்
- வெள்ளி விருந்து - சமயக்கட்டுரைகள்
- இராசாத்தி - நாவல்
- கலைந்த போகும் கோலங்கள் - நாவல்
- அறிவியல் கட்டுரைகள் - கட்டுரைத் தொகுப்பு
- நீறு பூத்த நெருப்பு - 3வது சிறுகதைத் தொகுதி
- மனுஷ்யா - 4வது சிறுகதைத் தொகுதி
- உண்மையே பேசு - சிறுவர் சிறுகதைகள்
- பயந்த புலி - சிறுவர் சிறுகதைகள்
- முகில்வண்ணன் கவிதைகள் - கவிதைகள்
- முத்துச்சரம் - அம்மன் கவிதைகள்
- பாரதியார் ஒரு யுக புருஷர் - கட்டுரைகள்
- திருவருள் மாலை - முருகன் கவிதைகள்
- பாசமலர்கள் - முருகன் கவிதைகள்
- ஒரு தேடல் - கவிதைகள்
- ஞானக் கதைகள் - ஆன்மீகக் கதைகள்
- தந்தையானவள் - குறுங்காவியம்
- சண்முகநாதன் ஒரு....... - தொகுப்பு
- குடிகளின் வரலாறு - கட்டுரை
- தரிசனம் - கவிதைகள்
- சகோதர பாசம் - சிறுவர் சிறுகதைகள்
- இளவரசன் - சிறுவர் நவீனம்

வானொலியில் பங்களிப்பு : (ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்)

- ஈழத்துப் பாடல்கள் மெல்லிசைப் பாடல்கள் - ஏழு ஒலிபரப்பாகி உள்ளன.
- சிறுவர் மலரில் சிறுவர்கள் பாடல்கள், கதைகள் ஒலிபரப்பாகி உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிய பத்திரிகைகள் :

தினகரனில் ஆரம்பித்து ஏனைய பத்திரிகைகளிலும் எழுத ஆரம்பித்தார் வீரகேசரி, சிந்தாமணி, தினபதி, சூடாமணி, மித்திரன், தினமுரசு, நவமணி தினத்தந்தி, சுதந்திரன், சுடர், அண்மையில் செங்கதிரிலும் இவரது கதை வெளிவந்திருக்கிறது.

இறுதியாக 2012இல் தினகரன் "இளவரசன்" என்னும் சிறுவர் தொடர் நவீனம் வெளிவந்து முடிந்திருக்கிறது. இப்போது லண்டனில் இருந்து வெளிவரும் "காற்றுவெளியில்" (Digital) இவரது கவிதைகள் வெளிவந்து கொண்டிருந்தது.

## பொதுச்சேவைகள்

ஆரம்பத்தில் இருந்து பொதுச்சேவையிலும் ஆலய சமய சேவைகளிலும் ஈடுபாடு கொண்ட இவர் தொடர்ந்து இறுதிவரை பொதுச் சேவையில் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

ஏற்கனவே பதினேழு சங்கம், மன்றங்களில் முக்கிய பதவிகள் வகித்த இவர் அவற்றில் சிலவற்றை மாதிரிச் சங்கங்களாக மாற்றிய பெருமையுண்டு. இவர் ஆலயத்தில் செய்த சேவைகள் இன்னும் சான்று பகர்வதாக இருக்கின்றன. இப்போதும் சிலவற்றில் தலைவர், செயலாளர், பொருளாளர், கணக்காய்வாளர் எனப் பல பதவிகளை வகித்து செய்த சேவையில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.

இன்று இலங்கையிலும் சர்வதேசத்திலும் பிரபலமாகப்பேசப்படும் கல்முனைநெற் இணையத்தளம் 2015இல் திரு.புவிநேசராசா கேதீஸ் அவர்களால் ஆரம்பிக்கப்படும்போது இயக்குனர்சபை உறுப்பினர்களுள் ஒருவராக முகில்வண்ணன் அவர்கள் இருந்து ஆலோசனைவழங்கியவராவார்.

கண்டி மலையக கலைகலாசாரச் சங்கத்தின் செயலாளராக இருந்து செய்த சேவைகள் பல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தி மார்க்கச் சேவை :

திருவாசகம் கந்தசஷ்டி போன்ற தமிழ்நூல்களை மொழிபெயர்த்து சிங்களத்தில் எழுதியுள்ளார். இதற்கு இந்துகலாசாரதிணைக்களம் யாழ்ப்பாணத்தில் 2016இல் நடாத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாட்டில் வைத்து பாராட்டிக் கௌரவிக்கப்பட்டவராவார்

மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனம், பன்னிரு திருமுறை மொழி பெயர்ப்புத் திட்டத் தலைவர் மறவன் புலவு சச்சிதானந்தன் அவர்களுக்காக மொழி பெயர்ப்பாளர்கள் திரு இ.வடிவேல், திரு.டி.ஜி.லிண்டன் ஆகியோரை இணைத்துக் கொண்டு ஒருங்கிணைப்பாளராக இத்திட்டத்தை நிறை வேற்றுவது. ஏற்கனவே பல பதிகங்கள் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இணையத்தளம் - www.thevaaram.org. இல் இதனைப் பார்வையிடலாம்.

ஞான மார்க்கச் சேவை

ஞான, தியான ஆங்கில நூல்களை தமிழில் மொழிபெயர்ப்பது. இதுவரை ஏழு ஆங்கில நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

இத்தகையதொரு கனதியான ஆழமான இலக்கியவாதியை கிழக்குமண் இன்று இழந்து நிற்கிறது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கல்முனைநெற் இணையத்தள குழுமம் பிரார்த்திக்கின்றது.

வேதசகா
மலர்க்குழு ஆசிரியர்,
கல்முனை நெற் ஊடக வலையமைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் ராஜகுமாரி எழுதுகிறேன் அப்பா..!

அரச கௌரவிப்பு கலாபூஷணம் உள்ளிட்ட இலட்சினைகள் சுவரை அலங்கரிக்கின்றன. நீங்கள் எழுதிய புத்தகங்கள் அடுக்கப்பட்டுக் கிடக்கின்றன. தட்டுத்தட்டாக உங்கள் நூலக அடுக்குகள் உங்கள் தொழுகைக்காக ஏங்குகின்றன. நீங்கள் எழுத திட்டமிட்டு குறிப்புகள் பதியப்பட்டிருந்த கணனியும் மௌனித்து கொண்டது.

அப்பா! எழுத்தாளர் என்று போர்த்தப்பட்ட பொன்னாடையை எடுத்து சுவரிலடித்த ஆணியில் மாட்டி விட்டது போல் ஒரு சுதந்திரத்தோடு எங்களோடு நீங்கள் வாழ்ந்த வாழ்வு எங்களுக்குமட்டுமே உரித்தான மகிழ்ச்சியின் மகுடமாகும். நீங்கள் குழந்தையா நாங்கள் குழந்தைகளா என்று கண்டுபிடிக்க முடியாதபடி நாம் சங்கமமாகும் சம்பவங்கள் நிறைந்த வாழ்வு அது.

ஒரு ராஜகுமாரியின் வருகையாகவே என் பிறப்பு கொண்டாடப்பட்டது. அந்த கொண்டாட்டத்தோடு "ராஜகுமாரி" கதாபாத்திரம் நின்றுவிடவில்லை. உங்கள் இறுதி நாள் வரை என்னை ராஜகுமாரியாகவே நீங்கள் பார்த்தீர்கள். பள்ளி நாட்களில் எல்லா வசதிகளையும் எல்லோரையும் விட தூக்கலாகவே நான் அனுபவித்தேன். அன்பு மழையில் நனைந்தே நான் வளர்ந்தேன். நானும் தாயாகி வெளிநாட்டு வாழ்வுக்குள் நுழைந்தபோதுகூட, உங்களால் நான் குழந்தையாகவே புரியப்பட்டேன். நீங்களும் அம்மாவும் இங்கிலாந்து வந்திருந்தபோது கடைகளில் கொள்வனவு செய்து நான் பொருட்களை தூக்கி வருவதை பார்த்து, ஓடிவந்து அவற்றை நீங்களே தூக்கவேண்டும் என்று அடம்பிடித்தபோது தெரிந்தது "நான் இன்னும் உங்கள் குழந்தை ராஜகுமாரியாகவே உங்களுக்குள் வாழ்கிறேன்" என்பது எனது பிள்ளைகள் குறும்பாக என்னைப்பற்றி ஏதாவது சொன்னாற்கூட நீங்களும் குழந்தையாகி எனக்காக அவர்களுடன் சண்டையிடும் அழகே தனி.

எனது பிள்ளைகள் மீது நீங்கள் வைத்திருந்த அன்பு வலுவானதும் பவித்திரமானதும் அப்பா அவர்களுடன் நீங்கள் அன்பாக சீண்டிவிளையாடிய தருணங்கள் மறக்கமுடியாதவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாயிரம் மைல்கள் நாம் பிரிந்து வாழ்ந்தபோதும் பாசம் என்னும் பிணைப்பால் ஒன்றாக இருந்தோம். உள்ளுணர்வால் உந்தப்பட்டு உங்கள் நலம் அறிய நான் விசாரிக்கும்போதெல்லாம் சிக்கல்கள் இருந்தாலும் அவற்றை மறைத்து என்னை மகிழ்வித்த சம்பவங்கள் அதிகம். மோட்டார்சைக்கிள் விபத்து ஓர் உதாரணம் ஒளிப்பட உரையாடலில் சிரித்துக்கொண்டு கையசைத்தீர்கள்.

அருகில் உமா அழுதுகொண்டு நிற்பதை பார்த்தே நான் நிலமையை உணர்ந்தேன்

உங்களுடைய நேர்மறை சிந்தனைகள் கம்பீரமானவை. சோர்ந்து கிடப்போருக்கு தைரியமூட்டுபவை. என்னால் முடியும் என்பது உங்களுடைய பலம்மிக்க நம்பிக்கை. மருத்துவமனையிலும் நகைச்சுவை உணர்வுடன் உங்கள் உரையாடல்கள் அமைந்தன. உங்களை நீங்கள் என்றும் இளமையாய் உணரும் பாங்கு அழகானது. வாழ்க்கையை ரசிக்க தெரிந்தவன்தான் படைப்பாளியாக முயுடியும் என்பது உங்கள் மூலம் அறியப்படும் உண்மை.

நீங்கள் கடைப்பிடித்த ஆன்மீகம் மரணபயத்தை விரட்டியதா? அல்லது உங்கள் பட்டறிவு மரணம்பற்றிய தீர்மானத்தை உணர்த்தியதா என நானறியேன். மரணத்தை நீங்கள் எதிர்கொண்ட துணிவு வித்தியாசமானது "யாரும் அழாதீர்கள்: என்று பல வருடங்களுக்கு முன்னரே எழுதிவிட்டு மரணநிமிடங்களில் நீங்கள் காட்டிய துணிவு தெளிவானது.

அப்பா! உங்களுடனான இறுதி நிமிட உரையாடல்களின்போது உங்களை அணைத்துக்கொள்ள உங்களை முத்தமிட என் கண்ணீர் முத்துக்களை சொரிய நான் அருகில் இல்லையே என்னும் ஏக்கம் நெஞ்சை நிறைக்கிறது. என்றும் போல் இன்றும் நீங்கள்தான் என்னை வழிநடத்துகிறீர்கள் என்று உணர்கிறேன் அப்பா.

என்னை உங்கள் மகள் என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப் படுகிறேன் அப்பா உங்களுக்கென்று அழியாத ஒரு பெயர் உள்ளது. அதனை என்றும் காப்பாற்றி வாழ்வோம் அப்பா.

மகள் றோகினி
இங்கிலாந்து - 25.9.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்ற நாள் போலவே மற்ற நாளெல்லாம்..!

அப்பா என்னும் சொல்லுக்குள் "நல்லாசிரியனாய் உற்ற தோழனாய் பாதுகாவலனாய் வாழ்வளித்து வழிநடத்தும் பண்பாளன்" என்னும் மிகப்பெரிய பொறுப்பு உள்ளதாக ஆன்றோர்கள் சொல்வர். எனக்கு பிள்ளைகள் பிறக்குமுன்னரே... அவர்கள் வளர்ந்து பாசத்தை பொழியும் காலம் வருவதற்கு முன்னரே, நான் அப்பா என்னும் அந்த உயரிய பொறுப்பின் மகத்துவத்தை உணர்ந்து என்னை வடிவமைத்துக்கொள்ள உங்கள் வாழ்க்கைதான் முன்னுதாரணமானது அப்பா.

உங்கள் பிள்ளைகள் நாங்கள் மூவரும் வளர்ந்த காலங்களை கண்ணுக்கு முன் கொண்டுவரும் போது வியக்கத்தக்க பல விடயங்களை ஞாபகக் கோர்வையாக காணமுடிகிறது. ஒவ்வொருவரின் மனப்போக்கையும் கவனத்திலெடுத்து அவரவருக்கு ஏற்றபடி எங்களை வழிநடத்தி வந்துள்ளீர்கள் எனக்கு ஈடுபாடான நான் சிறுவனாக இருந்தபோது ஆர்வம்காட்டிய தொழில்நுட்பம்சார்ந்த விளையாட்டு பொருட்களும் அவற்றுக்கான தளபாடங்களையும் வீட்டில் நிறைத்து எனது சிறுபராயத்து ஆசைகளை நிறைவேற்றி இருக்கிறீர்கள். நான் அவற்றை சேதப்படுத்திய போதெல்லாம் அதிலிருந்து நான் ஏதோ ஒன்றைக் கற்றுக்கொள்வேன் எனக்கூறி ஊக்கப்படுத்தியுள்ளீர்கள்.

பிற்காலத்தில் எனது ஒவ்வொரு பராயத்திலும் அன்பால் என்னை அணைத்து எனது தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்ந்துள்ளீர்கள். பெரியவனாகி திருமணமாகி நானும் தந்தையாக எனக்கும் குடும்பம் என்னும் ஒரு கட்டமைப்பை உண்டுபண்ணிய பின்னரும் அவ்வப்போது எனது குடும்பம் செழிக்க உங்கள் ஆதரவையும் அறிவுரையையும் தந்தவண்ணமே உங்கள் காலம் கரைந்துள்ளது.


எனது மனைவி பிள்ளைகள் மீது நீங்கள் கொண்டிருந்த பாசம் அக்கறை நிறைந்தது என்னை எப்படி உற்சாகமூட்டி ஊக்கப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு காட்டி அரவணைத்து ஆளாக்கினீர்களோ, அப்படியே என் பிள்ளைகள் மீது பாசமழை பொழிந்து அன்பால் வளைத்து நன்நெறியூட்டினீர்கள். இனியும் உங்கள் வழிநடத்தல் இருக்கும் என்று நான் கவலையற்றிருந்த நேரத்தில் எங்களைவிட்டு நீங்கள் பிரியும் இந்த சம்பவம் பேரிடியாய் தோன்றுகின்றது அப்பா. உங்கள் நினைவுகளையும் அறிவுரைகளையும் நெஞ்சத்தில் நிறைத்து வணங்குகிறோம்.

உங்களை என்றும் இதயத்தில் இருத்தும் உங்கள் மகன்
பிரேம் நந்தக்குமார் மனைவி பிள்ளைகள்
பிரான்ஸ் 02.10.2020





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் உன் நினைவுகளுடன் அப்பா..!

எங்கள் இதயமான என்னப்பா
மண்ணுலகம் விட்டு விண்ணுலகம்
சென்றுவிட்டீர்கள் - எனினும்
மனம் ஏற்க மறுக்குதேயப்பா......

என் கடைக்குட்டி என்னைப்போலென்று
சொல்லி மகிழ்வாயே என்னப்பா
என்னில் உன்னைக்கண்டு மகிழ்ந்தேனே என்னப்பா...

நான் பார்த்து வியந்த பல் கலைகளிலும்
சிறந்து விளங்கிய என் அறிவுச்சிகரம் என்னப்பா
நான் பார்க்கும் போதே கண்முன்னே என்னை
வியக்கவைத்து சென்றீர்களே அப்பா

அம்மாவுக்குப்பின் அம்மாவுமான என்னப்பா
என்றும் என்னுடன் தொடர்பிலிருப்பீர்களே
இன்று தவிக்க விட்டுவிட்டு சென்றுவிட்டீர்களே அப்பா...

மலர்ந்த முகம் கொண்ட என்னப்பா
இன்சொல்லில் எங்கள் மனதை கொள்ளை
கொண்ட நீங்கள் இன்று சென்றுவிட்டீர்கள் - எனினும்
என்றும் அருள்வழி காட்டுவீர்கள் அப்பா..

இறைவனடியில் இளைப்பாறிக் கொண்டிருங்களப்பா
எங்களை விட்டுப்பிரிந்ததாகவில்லை
என்றும் எங்களுடன் அம்மாவும் நீங்களும்
வாழ்கின்றீர்களென்று வாழ்கின்றோமப்பா!!

மகன் சண்முகநாதன் சரேன் நந்தகுமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவின் நிழல்கள்...













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






நினைவின்
நிழல்கள்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றி சொரூபமாகிவிட்டீர்களே..!

விசேடமாக நேசிக்கப்படும் அன்பான, வசீகர அழகும், கம்பீரமும், அறிவில் ஆற்றலுடைய தம்பி சண்முகநாதன்..

அழகம்மா (மகள்கள், மகன்கள்)...

மிகவும் எளிமையாகவும், இன்ப துன்பங்களில் பங்கேற்று, சுபாவத்திலும் நடத்தையிலும் மிக மேன்மையாளராக திகழ்ந்தார் எங்கள் மாமா சண்முகநாதன்..

அழகம்மா (பேரன்கள், பேத்திகள்)...

சிறுவயதில் அம்மப்பா என்ற உறவை இழந்த எங்களுக்கு குறையேதும் இல்லாமலும், நற்குணங்கள் என்ற அணிகலன்களுடன் எங்களை நல் வழிபடுத்தினீர்கள். எங்கள் மீது நீங்கள் கொண்டிருந்த எண்ணங்கள் வார்த்தைகள் எப்போதும் ஆசீர்வாதங்களால் நிறைந்த வாழ்க்கையை வாழ உறுதி கொள்கின்றோம்.

நீங்கள் பரதந்தையுடன் இருந்து எங்கள் அழகம்மா குடும்பத்திற்கு ஒரு படகோட்டியாய், வாழ்க்கை வாழ்வதற்கான கலையை வழிகாட்டினீர்கள்.

நீங்கள் வெற்றி சொரூபமாகிவிட்டீர்கள் சூழ்நிலை என்ற மாயையிடமிருந்து ஒரு விநாடியில் அவற்றை கடந்து உங்களை யாருமே ஆட்ட அசைக்க முடியாதவராக வெற்றி சொரூபமாகிவிட்டீர்கள்.

கலைகளும், தெய்வீக பண்புகளாலும், தெய்வீக சக்திகளாலும் நிறைந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய அழகம்மா குடும்பத்தினர் ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி சொல்லி இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அழகம்மா கிருஸ்ணபிள்ளை குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகிலாய் மறைந்த முகில்வண்ணனுக்கு அஞ்சலி...

"Uncle" எனும் சொல்லுக்கும்
"Grandpa" எனும் வார்த்தைக்கும்
"மகள்" என்கிற ஒற்றை வார்த்தையை
பதிலாய் தந்தவர் நீங்கள்..

என் அப்பாவின் முடிவுடன்
எனக்கும் என் குடும்பத்திற்குமான
உங்கள் உறவினை - காலம்
உரப்படுத்தியிருந்தது Uncle

என் பிள்ளைகள் தாய்வழி அம்மப்பாவாக
அறிந்திருந்தது உங்களோடுதான் - எங்கள்
ஒவ்வொருவருக்குமான உங்களின்
அன்பு தனித்துவமானது Uncle

எனது அப்பாவின் குரல் போலவே
உங்களது குரலும் இருக்கும் Uncle
உங்கள் உருவத்தில் நான் - அவரை
காணும் விதமாகவே நீங்களும் நடந்துகொண்டீர்கள்

என் குடும்பத்தின் ஒவ்வொரு நிகழ்விலும்
நீங்களும் கண்மணி Aunty ம் முக்கிய உறுப்பினர்
உங்கள் இருப்பினை உறுதிபடுத்தி காட்டுவது
உங்கள் காதல் கண்மணியின் நகைச்சுவையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்மணி aunty யின் இழப்புடன்
உங்கள் மெய் வாழ்க்கை முடிந்திருந்தது
அதன் பின்னராக நீங்கள் வெற்று உடம்பாய்
மட்டுமே இருந்ததாக ஒரு உணர்வு எனக்கு

Uncle, உங்களின் மறைவு எமக்கு
வருத்தத்தினை தந்தாலும் - நீங்கள்
அனைவருமாக மேலுலகில் நிலையான
நிம்மதியினை அடைந்திருப்பீர்கள் எனும் - என் எண்ணம்
மனநிறைவினை தருகிறது அங்கிள்....

போய் வாருங்கள் Uncle....
பாசத்துடன்

**Mrs.** ரதினி முருகானந்தன் (கங்கா)
தங்கராஜா ராஜலெட்சுமி குடும்பம் சார்பாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லாமல் சென்றீரே...

விழுதுவிட்டு விருட்சமாய் நின்றவரே வேரின் அடையாளம் இன்றி எங்கே தொலைந்து போனீர் - மாமா

சோகத்தின் விளிம்பில்

உட்கார்ந்து கொண்டு

கண்ணீரால்

முகம் நனைக்கிறோம்

வாழ்ந்த காலங்களை மீட்டிப் பார்க்க முடியவில்லை - மாமா நீங்கள் - பிரிந்த கணங்களில் இருந்து

மாமா என அழைத்த எம் உதடுகள் இப்பொழுது ஊமையாகி விட்டன

வேதனையும் சோதனையும் எம்மோடு சொந்தம் கொண்டாடுகின்றன

நீங்கள் சலனமின்றி நிரந்தரமாய் தூங்கிவிட்டீர் - மாமா நாமோ நடைப்பிணமாகிவிட்டோம்.

கனகசுந்தரம் (சிவந்தி) பரநிருபசிங்கம் குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பிக்கு ஒரு மடல்....!

அன்னை மடியில்
கண் திறந்த முத்தே
முகில்வண்ணா!
விண்ணகம் சென்று
வேதனை தந்தாயே...

தந்தை, தாய் தவத்தால்
நவரெத்தினங்களாக
உருவானோம்
தனியே சென்று நீயும்
தவிக்கவிட்டதென்ன!

அல்லும் பகலும் நாம்
அன்பைச் சுமந்து
மகிழ்ந்திருந்த நினைவுகளை
என் கண்ணீர் சொல்கிறதே தம்பி...

சப்த சகோதரிகள்
ஏக சகோதரன்
இவர்களுடன்
இனிமையாய் இருந்த
காலங்கள்
கனவுகளாய் வருகிறதே...

கல்வியில் சிறப்புற்று
மும்மொழியில் சரளமாய்
கதைபேசும் உன் அழகை
காண்போமோ இனி...

பொறியியலாளராகி
உன் அடையாளத்தை
பொறித்த போது
என் உள்ளத்தில்
பொங்கிய உவகைக்கு
அளவில்லை தம்பி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத் தொண்டில்
ஈடுபட்டு தலைசிறந்தாய்
திரௌபதி அம்மன்
திருத்தலத்தில் தலைவரானாய்
ஓம் சாந்தி தாபனத்தின்
உற்ற தொண்டனாய்
உயர்ந்தாயே...

ஆக்கமும் ஊக்கமும்
அமைந்திருந்த உன்வாழ்வில்
சிந்திக்க தூண்டும்
சிறுகதையும், கவிதையும்
சமயநூலும்
ஆக்கி அணி செய்து
அளவில்லா பெருமை சேர்த்தாய் ...

உடன் பிறப்பின் பிரிவு
உயிர் உள்ள
நடைபிணமாய்
உலுக்கி விட்டது தம்பி...

சிறகொடிந்த பறவைபோல்
உறவறுந்து நின்றாலும்
சிந்தனையில் நின் நினைவும்
என்றென்றும் நிலைத்திருக்கும் ...

இவ்வுலகின்
இறைதொண்டுப் பலனால்
அவ்வுலகில்
அவன் அருள் கிடைக்க
இறைஞ்சுகின்றேன் தம்பி.

துயருடன்
அக்கா பூமணி வேதராணியம் குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தால் மறக்க முடியாத மனிதர்...

கண்மணியின் காதல் கணவராக
பேச்சில் அமைதியையும்
கவிஞராகவும் படைப்பாளியாகவும்
கண்மணியின் நினைவோடு
வாழ்ந்தாயே!

எங்கள் அருச்சுனர் குடும்பத்தின்
ஆணி வேர் நீயல்லவா?
"அப்பா" என்ற ஆல மரமாய் இருந்தாய்
ஆயிரம் சொந்தங்கள்
அணைத்திட இருந்தாலும்
அருகில் இருப்பதால்
அன்பு
அதிகரிப்பதும் இல்லை
தூரத்தில் இருப்பதால்
அன்பு குறைவதும் இல்லை
எல்லோரிடமும் அன்பு கொண்டவர்.

ஒருவர் வாழ் நாளில் செய்த அளப்பெரிய ஆக்கங்கள் சிறப்புகள் சேவைகள் அவர் விட்டு சென்ற எச்சசொச்சங்கள் என்பன அவரது இருப்பினைப் புலப்படுத்தி நிற்கின்றன.

கதை, கவிதை, கட்டுரை எழுதி எங்களது அருச்சுனர் குடும்பத்துக்கும் பாண்டிருப்புக்கும் பெருமை சேர்த்தவர். மனித வாழ்வியல் தத்துவங்களான அன்பு, கருணை, காருண்யம், பண்பு, அடக்கம், ஆன்மீகம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் அமரத்துவமடைந்த எங்கள் மாமா, சித்தப்பா, அப்பப்பா, அம்மப்பா..அவரின் ஆத்மா சிவனடியில் ஆறுதல்பெற வேண்டி நிற்கின்றோம்.

தங்கப்பாக்கியம் வடிவேல் குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்புக்கு இணையான இணைப்பு...

எங்கள் உறவு நெருக்கமானது..

பெண் கொடுத்து பெண் எடுத்த இருவழி உறவு.

எங்கள் குழந்தைப்பருவத்தில் அனேகமான நாட்கள் இரண்டு குடும்பமும் ஒன்றாகவே பயணித்துள்ளன. நண்பர்கள் இருவர் உங்கள் நட்புக்கு இலக்கணமாக செய்துகொண்ட பிணைப்பின் சாட்சியாக உருவான பந்தமும் சொந்தமும் நம்முடையது.

மாமா என்னும் சொல்லைத்தவிர எந்த சந்தர்ப்பத்திலும் உங்கள் பெயரைச் சொல்லி நாங்கள் அழைத்ததில்லை. அப்படி ஒரு மரியாதை இறுதிவரை தொடர்ந்தது. அதில் ஒரு மகிழ்வு எங்களுக்கு உண்டு மாமா.

அன்று குழந்தைகளாக நாங்கள் வாழ்ந்தபோதும் இன்று குழந்தை களுக்கு பெற்றோராக நாங்கள் வாழ்கின்ற நிலையிலும் உங்களிடம் நாங்கள் கண்டு மகிழ்ந்த விடயம் அன்பு என்னும் பேராற்றலே. எங்களோடு அன்று குழந்தையாகமாறி நீங்கள் விளையாடிய அதே ஈர்ப்பும் மகிழ்வும் இன்று எங்கள் பிள்ளைகளிடம் நீங்கள் கொண்டிருந்த ஈடுபாட்டை ஒத்திருந்தது.

அன்புக்கான உங்கள் இதயம் என்றும் மாறியதில்லை.

உலகுக்கு ஒரு எழுத்தாளனாக அறியப்பட்ட நீங்கள், குடும்பம் என்னும் பாசவலைக்குள் குழந்தையாக கட்டுண்டு இருந்தீர்கள்.

பிள்ளைகள் மீது நீங்கள் கொண்டிருந்த இணைப்பு இரும்புக்கு இணையான உறுதி கொண்டது.

சிறந்த தந்தையாக சிறந்த உறவினனாக சிறந்த படைப்பாளியாக சிறந்த சமூக சேவகராக வாழ்ந்து சிறப்பாக உங்கள் இயக்கத்தை நிறுத்தியுள்ளீர்கள். உங்கள் மருமக்கள் என்று சொல்லிக்கொள்வதில் பெருமையடைகிறோம் மாமா.

திருமதி புவனேஸ்வரி இராசையாவும் பிள்ளைகளும்
பிரித்தானியா 25.9.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைகள் கடந்தது உங்கள் பெயர்...

பாண்டவர் பூமியாம் பாண்டிருப்பிலே வேலுப்பிள்ளை தம்பதியர்க்கு மகனாகப்பிறந்து கண்மணி மாமியைக் கரம்பிடித்து முத்தான செல்வங்கள் மூன்றைப் பெற்றெடுத்து சொந்தம் கொண்டீர்கள். தாய்மாமன் உறவு தன்னிகரற்றது தங்களின் தங்கை வயிற்றில் பிறந்து உங்களை தாய்மாமனாக பெற்றது எங்களுக்கு கிடைத்த பெருவரமே... உங்கள் சகோரத சகோரிகள் உங்களை அண்ணா, தம்பி என்று அழைக்கும்போது நாங்கள் காது குளிர கேட்டிருந்தோம்.

எங்கள் அம்மா உங்களை “கணேஸ் அண்ணா” என்றழைப்பதுவும், என் அப்பா “என் கணேசன் மச்சானைப் போல யாருமில்லை” என்று அடிக்கடி கூறுவது ஞாபகம் வருகிறதே.......

என் அன்பு மாமா......

நீர் கற்ற கல்விக்கு பலனாக பொறியியலாளராக கடைமையேற்று கண்ணியம் தவறாது கடமை புரிந்தீர்கள். எலக்ரோன் எனும் நிறுவனத்தால் தன் எல்லைகள் கடந்துதும் உங்கள் பெயர் இன்றும் தொடர்கிறதே......

இலக்கியத்தில் ஆர்வம் கொண்டு எழுத்தாளராகி "முகில்வண்ணன்" எனும் புனைப்பெயரில் புகழீட்டினீர்கள் .பட்டங்கள், பதவிகள் தங்களை தேடிவந்த போதிலும் கர்வம் தங்களை எட்டிக்கூடப் பிடிக்கவில்லை ஏனெனில் நீங்கள் இறை சிந்தனையில் மூழ்கிவிட்டீர்கள். பிறப்பு எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம், ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்கவேண்டும் என்று கூறும் அளவிற்கு வாழ்ந்து காட்டினீர்கள். பல கோணங்களிலும் பரிணமித்த எங்கள் உறவு மீளாத்துயில் கொண்டுவிட்டதே என கலங்கி நிற்கிறோம்....

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

என்றும் தங்கள் நினைவுகளுடன் .......
லீலாவதி மகேஸ்வரன் குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்முக ஆற்றல் கொண்ட சண்முகநாதன்...

பன்முக ஆற்றல் கொண்ட முகில்வண்ணன் என்னும் இந்த
சண்முக நாதன்யாத்த நூல்களே சாட்சியன்றோ
மண்ணிலே மறந்தமான புண்ணிய வாழ்வைசொல்லி
கண்ணியம் காத்துநின்ற இலக்கியன் மறைந்தானம்மா!

கண்மணி துணையான இல்லறவாழ்வு கொண்டும்
உன்புகழ் நிலைக்கத்தக்க சந்ததிதந்து வென்றும்
பெண்ணியம் காத்தநாவல் புதுமையாய்க்கதைகள் என்றும்
இன்மணிச் சிறாருக்காக இலக்கியச் சிறப்பும் செய்தாய்!

இன்னல்கள் தீர்க்கும்அந்த மெய்ஞானம் என்றியம்பி
பண்ணிய திருவாசகத்து பாடல்கள் பலரைச்சேர
சிங்கள ஆன்றாரோடு பேச்சுகள் நடத்திப்பின்னர்
அங்கொரு மொழிபெயர்ப்பை ஆக்கமாய் கொண்டுவந்தாய்!

அங்கமாய் எழுத்தர்கூடும் அவைகளை அலங்கரித்தாய்
இன்னிசை பாடல்யாத்து இலங்கைவா னொலிக்குள்நின்றாய்
பங்கமாய் சூதுவந்து சூழ்ந்ததற்கால் வாதுசெய்தாய்
பொன்மகள் தமிழைவாழ வைத்திட பொறுப்பும்ஏற்றாய்!

பொன்னிலே பொறித்தாற்கொப்ப நல்லவை எழுதி வைத்தாய்
மண்புகழ் மரபைமாண்பை ஆய்வுகள் செய்துயாத்தாய்
கல்லூரி மேடைதன்னில் மன்னனாய் ஆட்சி செய்தாய்
இன்னுமே துண்டோசொல்ல! உன்புகழ் வெல்லவென்பேன்!!

அமுதநதி சுதர்சன்
(நடேஸ்வரி சுதர்சன் குடும்பம்)
ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதய அஞ்சலி...

இளமையில் அருச்சுனர் வேலர் குடும்பம் என்பது எனது உறவினர் போல் இருந்தது. அந்தளவுக்கு அமரர். வே. சண்முகநாதன் நட்போடு அவர்கள் சகோதரிகள், சகோதரர்கள் எங்களோடு என்றில்லாமல் பாண்டிருப்பு மக்களோடு பாண்டிருப்போடு அருச்சுனர் வேலுப்பிள்ளை குடும்பம் இருந்தபோது, பாண்டிருப்பின் பெருமையில் சிறப்பு மிகச்சீராக .இருந்தது.

அதன் பின் அருச்சுனர் மாற்றம் போல எங்கள் நட்புக்களிலும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றது, இவற்றில் சிக்காமல் அன்று போல் இறக்கும் வரை வாழ்ந்து காட்டிமறைந்தவர்.

பலவித படைப்புக்கள் எழுதும் எழுத்தாளர், கவிஞர், தலைமைகள் ஏற்றுச் செயல்பட்டவர், பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதி அம்மன், ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயங்களுக்கு இரண்டு வருடங்கள் தலைவராக இருந்து பிறவிப்பலன் கண்டவர். ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தை புதிய மெருகாக அமைப்பதற்கு இந்து இளைஞர் மன்றத் தலைவராக இருந்த போது, ராஜ கோபுரம் கட்டுவதற்காக அடித்தளம் போட்டு ஆலய முகப்பை அழகுற வைத்தவர். முருகன் கோயில், வைரவர் கோயில், சண்டேஸ்வரர் கோயில் ஆகமக் கோயிலாக வரவழி காட்டியவர்.

முதுமையிலும் இளமை கண்டவர் நோயினால் பல தடவைகள் அவர் உடல் பாதிப்படைந்தாலும், கருத்திலும், காரியங்களிலும் நேர்மை யினைக் கைக் கொண்டு, சிறந்த இந்துவாக சைவச் சாப்பாட்டில் இறுக்கமாக இருந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன கணணி வடிவங்களோடு தன் அறிவுத் திறமையினாலும், ஆங்கில சிங்கள மொழித் திறனாலும் கணணியில் வட்சொப் அமைப்பிலுள்ள நல்ல சமூக சமயக்கருத்துக்களை எடுத்து புத்தகமாக மற்றவர்கள் பயன்பெற வைத்தவர். ஆமை போல் அசிப்பில்லாமல் பன்னிரண்டு கலைப் புத்தகங்களை வெளியிட்டவர். தன் உழைப்பைக் கரைத்தவர், பணங்களை இழந்தவர்.

தமிழ் வழிபாடுகள் சிங்களத்தில் வெளிவர உழைத்தவர் கந்தசஸ்டி கவசம் தனை சிங்களவர்களும் கேட்கும்போது அறிந்து செயல்பட அதை நான் வெளியிட என்னைப் பெருமை சேர்த்தவர்.

பலவிருதுகள் பட்டங்கள் பெற்றதோடு அரச விருதான கலாபூசண விருது பெற்றவர், மகிழ்ந்தவர்.

நாம் தியான நிலைக்கு வரபல வழிகள் உண்டு அதில் கடுமையான தியானநிலை கண்டவர், இராஜ யோகியாக இறந்தவர்.

அவருக்கு சிவலோகப்பதவி நிச்சயம், எனவே அவர் மீண்டும் நம்மில் பிறக்க வேண்டும் ஞானியாக!

சாந்தி! சாந்தி! சாந்தி!

சிவஸ்ரீ க.ஐ. யோகராசா ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சாந்தி

பொதுவாக உலக வாழ்க்கையை பொறுத்தவரையில் பணம், அந்தஸ்து, உறவுகள் தான் சந்தோசத்திற்கான ஒரேவழியென அதில் மூழ்கி தங்களைத் தொலைத்துக் கொண்டிருக்கும் சமூகத்தின் மத்தியில் இவ்வாறான வெளிப்படையான விடயங்கள் எங்களுடைய பயணத்தில் உண்மையான சந்தோசத்திற்கும் இறுதிக்காலத்தை எதிர்கொள்வதற்கும் போதாது என்று உணர்ந்தவர்கள் வெகுசிலர் தான் அந்த விதத்தில் எமது சகோதரர் சண்முகநாதன் அவர்கள் தனது குடும்பம் பணம், அந்தஸ்து போன்றவற்றில் கவனமானவராக இருந்தாலும் அவற்றில் மாத்திரம் சிக்கிக்கொள்ளாமல் ஆன்மீகத்தையும் தேடி தனது வாழ்நாளில் ஒரு குறிப்பிட்ட பகுதியையும் ஆன்மீகத்திற்காகவே ஒதுக்கியிருந்தார்.

இவர் கடந்த 24 வருடங்களாக இப்பாதையில் காலடி வைத்த காலம் முதல் இறுதி மூச்சுவரை மிகவும் நேர்த்தியாகவும் திருப்தியாகவும் மற்றவர்களுக்கு உதாரணமாகவும் இருக்கும் வகையில் தனது ஆன்மீகப் பயணத்தை இனிதே நிறைவு செய்தவர். இவ்வாறு நிறைவு செய்ய அவர் ஆன்மீகத்தில் புரிந்துகொண்டவற்றை தெளிவுபடுத்த வேண்டும் எனில் பொதுவாக மன ஒருமைப்பாட்டையே குறிப்பிடுகிறது.

மன ஒருமைப்பாடானது அதன் முதற்படியாக மன ஒருமைப்பாட்டிற்கே எமது மனதை மாற்றி அமைக்க வேண்டும். அதாவது நான் யார் என்ற புரிந்துணர்வை முதலில் கொண்டுவரவேண்டும். நான் யார் என்ற புரிந்துணர்வு எமது மனதில் உருவாகும் சாதகமான எண்ணங்களில்தான் அது பிரதானமாகத் தங்கியுள்ளது.

சமயத்தை பற்றிய புரிந்துணர்வுதான எமது மனோபாவம் சாதகமாக மாறுவதற்கு வழிவகுக்கும் அத்துடன் இது தெளிவான நிலை அடையும் போது இயல்பாக இறைவனை உணர்கின்ற நிலைக்கு செல்ல முடியும் அதாவது ஆத்மாவாகிய நான் "ஜோதி வடிவம்" எனும் புரிந்துணர்வு நிலைக்கு வந்து இறைவனாகிய மேலான பரம்பொருளும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோதிவடிவானவர் என்ற புரிந்துணர்வுக்கு கொண்டு வரும் . இந்நிலையில் நான் என்னை உணர்ந்து இறைவனையும் உணர்கின்ற நிலைக்குச் சென்று அந்த விதையான பரம்பொருளிடம் இருந்து 100 வீதம் அன்பு அமைதி சந்தோஷம் பேரானந்தம் போன்றவற்றை பெற்று அனுபவிக்கும் அதியுன்னதமான நிலைதான் ''தியான நிலை'' என்று அழைக்கப்படும் இந்த நிலையில் கைதேர்ந்தவர்தான் சகோதரர் .சண்முகநாதன் அவர்கள். இந்த நிலையினை உணர்ந்ததன் காரணமாக அவருக்கென தனியான கோட்பாடுகளை வகுத்து அக்கோட்பாடுகளுக்குள் தன்னைப் பக்குவப் படுத்திக் கொண்டு பல்வேறுபட்ட சமூகங்களிற்கு மத்தியிலும் ஒரு சிறப்பான வாழ்க்கையை வாழ்ந்தவர். இந்த நிலைதான் ஆன்மீக ஈடேற்றநிலை எனக் கூறப்படும்.

இதனாலேயே இவர் பிரம்மகுமாரிகள் நிலைய அங்கத்தவர்கள் மத்தியில் எல்லோராலும் விரும்பப்பட்டவராகவும் ஏனைய புதிய அங்கத்தவர்களுக்கு ஓர் முன்னுதாரணமானவராகவும் சிறந்த முன்னோடி யாகவும் வாழ்ந்து வந்தவர். எனவேதான் அவர் பௌதீகமாக சரீரத்தை விட்டு நீங்கியிருந்தாலும் அவரது நினைவுகளும், உணர்வுகளும் எங்களின் நெஞ்சங்களை விட்டகலாது என்றென்றும் தொடர்ந்து கொண்டேயிருக்கும் ...

"நல்ல வளங்களும் நல்ல சந்தர்ப்பங்களும் காலம் காலமாக
எங்களுக்கு காத்திருக்காது. அவற்றை உரிய
நேரத்தில் பயன்படுத்தி நன்மை பெற வேண்டும்.
இல்லையெனில் அவற்றையிட்டு மனம் மிக வருந்தவேண்டிவரும்"

பி. கு. மாருதி
பிரம்ம குமாரிகள் நிலையம்
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கலாசாரத்தின் முன்னோடி அமரர் முகில்வண்ணன்...

இறைபதமடைந்த அமரர். வே.சண்முகநாதன் அவர்களது ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்தித்தவனாக அவர்பற்றிய கருத்துக்களை இம் மலரூடாக பகிர்கின்றேன்.

ஈழத் திருநாட்டின் தமிழ் இலக்கியதுறைக்கு சிறந்த பங்களிப்புக்களை வழங்கிய கல்முனை மாநகரில் இருந்து உருவாகிய இலக்கிய படைப்பாளிகளுள் ஒருவராக அன்னாரினை நம்மால் அடையாளம் காண முடிவதுடன் 1942ம் ஆண்டு பாண்டிருப்பில் பிறந்த இவர் எழுத்துலகில் முகில்வண்ணன் எனும் புனை பெயரால் பலராலும் அறியப்பட்டவராவார். இளவயது முதலே எழுத்தாக்கத் துறையில் ஆர்வம் கொண்ட இவரது முதல் கதையானது பற்றிமா கல்லூரியால் 1956ம் ஆண்டு வெளியிடப்பட்ட பத்திரிகையில் இடம் பெற்றிருந்தது. மேலும் தமது பாடசாலை காலத்தில் "ஆம்பல்" எனும் கையெழுத்து பத்திரிகையினையும் வெளியிட்டு இலக்கிய துறையில் ஆர்வமுள்ள மாணவனாக முன்னுதாரணமாக திகழ்ந்துள்ளார்.

பின்னாளில் அன்னாரது கால இலக்கிய செயற்பாடுகள் பற்றி நோக்குகின்ற போது தினகரன் பத்திரிகையூடாக தமது படைப்புக்களை மக்களுக்கு கொண்டு சென்றதன் மூலம் அவர் பற்றிய வாசர்களுக்கான அறிமுகங்களை முன்னிலைப்படுத்தியிருந்ததனையும் அறியமுடிகின்றது. இதனை தொடர்ந்து அவரது பல்வேறு படைப்புக்கான நூல்களாக வெளியிட்டு பெரும் புகழினையும் பெற்றிருக்கின்றார்.

இவரது நூல்கள் சிறுவர் இலக்கியங்கள், நாவல்கள், குறு நாவல்கள், கவிதை தொகுப்புகள், சிறுகதை தொகுப்புக்கள், கட்டுரை தொக்குப்புக்கள் என பல்துறை சார்ந்தவையாக காணப்படுவதுடன் எளிமையான மொழி நடையின் மூலம் வாசகர்கள் இலகுவாக கருத்துக்களை தெளிவு பெறக்கூடியதாக அமைந்திருந்தமை அவரது எழுத்துக்களின் சிறப்புகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய பல்வேறு பணிகளுக்கும் மத்தியில் கலை இலக்கிய, சமூக, சமய அமைப்புக்கள் பலற்றில் தன்னை இணைத்துக் கொண்டு மக்கள் பணி ஆற்றிய ஒருவராக வாழ்ந்துள்ளார். குறிப்பாக கல்முனை வடக்கு பிரதேச செயலகமானது முதன் முறையாக 2018ம் ஆண்டு பிரதேச கலாசார பேரவை ஊடாக நடாத்திய பிரதேச கலாசார விழாவின் போது கலாசார பேரவை உப தலைவராகவிருந்து சிறந்த பங்களிப்புக்களை வழங்கியதுடன் விழாவின் வெற்றிக்கும் முன்நின்று உழைத்தமையினையும் இதன் போது நினைவு கூறுவது சிறப்பென கருதுகின்றேன். இதன் தொடர்ச்சியாக 2019ம் ஆண்டு கலாசார பேரவையின் ஊடாக அமரர் முகில்வண்ணன் அவர்களால் மூன்று சிறுகதை நூல்கள் வெளியிடப்பட்டமையினையும் பதிவுகளாக குறிப்பிட வேண்டியுள்ளது. இவர் தமது இலக்கிய பணிகளுக்காக கலாபூசணம், முத்தமிழ் வித்தகர் போன்ற உயரிய அரச விருதுகளை பெற்றுள்ளார்.

இயல்பாகவே பழகுவதற்கு இனிமையான சுபாவம் கொண்ட முகில்வண்ணன் அவர்கள் தமது இறுதி காலங்களில் ஆன்மீக ரீதியான செயற்பாடுகளில் கூடுதலாக இணைத்து கொண்டதுடன் அமைதியான வாழ்க்கையினையும் முன்னெடுத்தார். இது அவரது உலக வாழ்வியலின் தத்துவத்தினை புரிந்து கொண்ட பண்பாக காணப் பட்டிருந்தது. மரணம் என்பது மனித வாழ்வில் சலனத்தை தருகின்ற ஒன்றாக அமைந்தாலும் பிறப்பு எனும் அத்தியாயத்தின் இறுதிப்படியே இறப்பு ஆகும். ஆண்டவனால் எழுதப்பட்ட நியதிகளில் இதுவும் ஒன்று என்பதனை அடிப்படையில் அன்னாரது இழப்பினையும் ஏற்று அவரது ஆத்மா ஆன்ம ஈடேற்றம் அடைய பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி... சாந்தி.... சாந்தி....

**T. J.** அதிசயராஜ்
பிரதேச செயலாளர்,
கல்முனை – வடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கியத்திற்கு பெருமை சேர்த்தவர் முகில்வண்ணன்...

கவிஞர் முகில்வண்ணன் அவர்கள் தன்னுடைய எழுத்தால் தமிழ் இலக்கியத்திற்கு பெருமை சேர்த்தவர் அதே போன்று தன்னுடைய தன்னலமற்ற சேவையால் சமூகத்திற்கு பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்.

எமது வைத்தியசாலை வளர்ச்சியிலும் அவருடைய உதவி ஒத்தாசைகள் எமக்கு கிடைத்ததை இத்தருணத்தில் நன்றியோடு நினைவு கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

"கல்முனை நெற்" குழுமத்தின் மூலமாக சமூகம் சார்ந்த பல்வேறு பணிகளை அமைதியாகவும், பண்பாகவும், சாணக்கியத்தோடும் முன்னெடுத்த ஒரு அற்புதமான மனிதர்.

முகில்வண்ணன் ஒருபல்பரிமாண ஆளுமை பொருந்திய மும்மொழிப்புலமை வாய்ந்த ஓர் இலக்கியவாதி. எழுத்துலகில் 60ஆண்டுகள் வலம் வருவது சாமானியமானதொன்றல்ல. அதுவும் இலக்கியத்தில் ஒருதுறையில் மட்டுமல்ல கவிதை கட்டுரை கதை சிறுகதை நாவல் என்று பல முகங்களில் தன்னைப்பதித்தவர்.

அவரது நாவல் முகம் அவரது பல்வேறுபட்ட இலக்கிய திறமை முகங்களில் ஒன்று மட்டுமே. பொதுமைப்படுத்தப்பட்ட செம்மை சிந்தனை சார்ந்த சேவை மனப்பாங்குடைய சேர்நேர்மைரீதிச் செயற்பாட்டாளர் உலகில் வலுகுறைவு. இக்குறை பட்டியலுள் அவர் முதன்மை பெறுகிறார்.

இலக்கிய லஞ்சம் கொடுத்து படைப்புக்களை வெளியிட விரும்பாத அவர் தனது பல நூல்களை வெளியீட்டுவிழா இல்லாமலே பரப்பியிருக்கிறார். "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும்" என்ற திருக்குறளின் வழி வாழ்ந்து காட்டியவர் அவர்.

அவருடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவருடைய குடும்பத்தினருக்கு என்னுடைய இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**Dr.** இரா. முரளீஸ்வரன்
வைத்திய அத்தியட்சகர்
ஆதார வைத்தியசாலை
கல்முனை (வடக்கு).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "முகில்வண்ணன்" என்றொரு முதிசொம்...

நாடறிந்த எழுத்தாளர் கலாபூசணம் வித்தகர் என்றெல்லாம் எம்மத்தியில் பேசப்படும் "முகில்வண்ணன்" என்ற புனைபெயருடன் கடந்த 60 வருடகாலமாக ஈழத்து இலக்கியவானில் உலாவந்த திரு.வேலுப்பிள்ளை சண்முகநாதன் அவர்கள் இன்றில்லை.

இக்குவலயத்தில் 78 வருடங்கள் வாழ்வாங்குவாழ்ந்த முகில்வண்ணன் அவர்களோடு இறுதி 25 வருடகாலம் நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்புக் கிடைத்தமை ஒரு பேறாகும். அத்தகைய மனிதநேயம் கொண்ட மாமனிதர் அவர். எதையும் சிரித்த முகத்துடன் நிதானமாக அணுகும் சுபாவம் அவருக்கு. தற்பெருமையில்லாத இடாம்பீகமில்லாத ஆரவாரமில்லாத ஓர் இலக்கியவாதி.

"முகில்வண்ணன்" தமிழ்வாசகரிடையே இடையீடின்றி நித்தமும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஒரு நாமமாகும். ஈழத்து வட்டாரச்சொல் தேடுவோருக்கும் மண்ணோடு குழைந்த சொற்பிரயோகங்களைத் தேடுவோருக்கும் ஊற்றுக்கண்ணான இலக்கியம் படைத்த பெயராகும்.

பஞ்சபாண்டவர் புகழ்பாடும் வரலாற்றுநாயகி குடிகொண்டிருக்கின்ற பாண்டிருப்பிலே பிறந்து முகில்வண்ணன் நாடறிந்த எழுத்தாளராகத் தடம் பதித்தவர். 1960களில் எழுத்துலகில் காலடி எடுத்துவைத்தவர். மென்குணம்படைத்த சிறந்தபேச்சாளர். அனைத்திற்கும் அப்பால் பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் ஈடுபாட்டால் ஒரு சீரிய ஆன்மீக கொள்கைவாதியாகவும் திகழ்ந்தார்.

கல்முனை பாண்டிருப்பைச் சேர்ந்த முகில்வண்ணன் சிறுகதை கவிதை நவீனம் கட்டுரை நாவல் என இலக்கியப்பரப்பில் 30நூல்களை எழுதி வெளியிட்டவராவார். எழுத்துலகில் 50ஆண்டுகள் எழுதி "பொன்விழாக் கண்ட எழுத்தாளன்" எனப் பெயரெடுத்தவர்.

"ஆனந்தக்கண்ணீர்" "அவள் ஒருதமிழ்ப்பெண்" "இனியும் நான் இராமன்தான்" "செல்லக்கிளி" "முருகனருள்" "பாண்டிருப்பு ஸ்ரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரௌபதை அம்மனாலயம்" "பாவைநோன்பு" "பளிங்குமாளிகை" "பொங்கல் கவிதைகள்" "சிங்கராஜா" "ஒரு தேடல்" "கட்டுரைக் களஞ்சியம" "நீறுபூத்தநெருப்பு" "எழுத்துலகில் 50ஆண்டுகள்" போன்ற காலத்தைவென்ற பல இலக்கியப்படைப்புகளை வெளியிட்டவராவார்.

"பிறப்பு இல்லாமலே நாளொன்று இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்று இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போல் ஒரு மாமருந்தில்லை"..

கவிஞர் வைரமுத்துவின் கவிவரிகளின்படி ஞாபகம் மறதி இரண்டும் மாமருந்துதான். எனினும் அவரது நூல்வெளியீட்டுவிழா தொடர்பான ஞாபகப்பதிவொன்றை இவ்வண் சுட்டுகிறேன்.

ஒரு தடவை கல்முனைநெற் இணையக்குழுமம் முகில்வண்ணன் அவர்களது மூன்று நூல்களை கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை நல்லதம்பி மண்டபத்தில் வெளியிட்டுவைத்தது இன்றும் பசுமரத்தாணிபோல் நினைவிலுள்ளது.

கல்முனைநெற் இணையத்தாபகர் திரு.புவிநேசராசா கேதீஸ் அத்தருணம் தொழில் நிமித்தம் கட்டாரில் இருந்தார். அவர் என்னிடம் வேண்டிக் கொண்டதற்கிணங்க அவ்வெளியீட்டு விழாவை நெறிப்படுத்தி தொகுத்து வழங்கும் பொறுப்பை ஏற்றுச் செய்தேன். அதுமட்டுமல்ல அவரது "நீறுபூத்த நெருப்பு" என்ற நவீனத்திற்கான அணிந்துரையை எழுதிய எனக்கு நயவுரையையும் செய்யும் பாக்கியமும் அதே மேடையில் கிடைத்தது.

அமர்க்களமாக நடைபெற்ற அவ்வெளியீட்டுவிழாவில் மிகவும் அடக்கமாக புன்முறுவலுடன் ஆரவாரமின்றி தனது மனைவி உள்ளிட்ட குடும்ப உறவுகளுடன் வீற்றிருந்தார். (இந்நிகழ்வின் தொகுப்பு பக்கம் 73 இல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வு நிறைவுற்றதும் நான் நூல்களைப் பெறாமலே வந்து விட்டேன். அன்றிரவே அவர் எனது வீட்டுக்குவந்து அந்த 3 நூல்களையும் கையளித்துச்சென்ற நன்றியுணர்வையும் பிறரை மதிக்கும் பண்பையும் உணர்ந்தேன்.

அன்று இப்பிரதேசத்தில் கல்முனை "எலக்ரோன்" என பிரபலமான பெயரோடு இருந்தவர் தொழிலில் பொறியியலாளராவார். பஞ்சாயக்குழு உபதலைவராக இருந்தவர்.1966களிலிருந்து எழுதத் தொடங்கியர். அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராக யானிருந்தகாலை முகில்வண்ணன் தனாதிகாரியாக இருந்தவர்.

இலக்கியப்பரப்பில் கலாபூசணம் வித்தகர் எனப்பல விருதுகளுக்கு சொந்தக்காரன். பாண்டிருப்பு துரௌபதை அம்மனாலய தலைவராக சிலகாலம் இறைபணியாற்றியவர். இலங்கை பிரம்மகுமாரிகள் அமைப்பின் முக்கிய பிரமுகராக இருந்த ஓர் ஆன்மீகவாதி. திருவாசகம் கந்தசஷ்டி போன்ற தமிழ்நூல்களை மொழிபெயர்த்து சிங்களத்தில் எழுதியுள்ளார். இதற்கு இந்துகலாசாரதிணைக்களம் யாழ்ப்பாணத்தில் 2016இல் நடாத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாட்டில் வைத்து பாராட்டிக் கௌரவிக்கப்பட்டவராவார்.

தான் சார்ந்த மண்ணின் வாசனையையும் அங்குவாழ்கின்ற மனிதர் களையும் அவர்களது பல்வேறு செயல்களையும் உணர்வு களையும் உணர்ச்சிகளையும் இலாவகமாகக்கையாண்டு இலக்கிய உலகிற்கு பல காத்திரமான படைப்புகளைப் படைத்திருக்கிறார் .

"தான் அறிந்த நல்லவற்றை பிறருக்கும் தெரியப்படுத்தவேண்டும். இல்லையேல் முன் ஏழு பிறவிக்கும் பின் ஏழு பிறவிக்கும் பாவங்கள் சூழும்" என மகாபாரதம் கூறிநிற்கின்றது.

அந்தவகையில் முகில்வண்ணன் ஒருபல்பரிமாண ஆளுமைபொருந்திய மும்மொழிப்புலமை வாய்ந்த ஓர் இலக்கியவாதி. எழுத்துலகில் 60ஆண்டுகள் வலம்வருவது சாமானியமானதொன்றல்ல. அதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்தில் ஒருதுறையில் மட்டுமல்ல கவிதை கட்டுரை கதை சிறுகதை நாவல் என்று பல முகங்களில் தன்னைப்பதித்தவர்.

அவரது நாவல் முகம் அவரது பல்வேறுபட்ட இலக்கிய திறமை முகங்களில் ஒன்று மட்டுமே.பொதுமைப்படுத்தப்பட்ட செம்மை சிந்தனை சார்ந்த சேவை மனப்பாங்குடைய சேர்நேர்மை ரீதிச் செயற்பாட்டாளர் உலகில் வலுகுறைவு. இக்குறை பட்டியலுள் அவர் முதன்மை பெறுகிறார்.

இலக்கிய லஞ்சம் கொடுத்து படைப்புக்களை வெளியிட விரும்பாத அவர் தனது பல நூல்களை வெளியீட்டுவிழா இல்லாமலே பரப்பியிருக்கிறார்.

முழுக்குடும்பத்தின் ஆணிவேராகத் திகழ்ந்த அவரை இறைவன் 78 வயதில் தன்னோடு இணைத்துக் கொண்டதில் அனைவருக்கும் வேதனைதான். இருந்திற்ற போதிலும் இயற்கையின் நியதி அதுதான்.

வாழ்வின் நியதி!

“வந்தவர் எல்லாம் தங்கிவிட்டால் இப்பூமியில் எமக்கு இடமேது? வாழ்க்கை என்பது வியாபாரம் அதில் ஜனனம் என்பது வரவாகும் மரணம் என்பது செலவாகும். போனால் போகட்டும் போடா!“ என்று கவிஞர் கண்ணதாசன் பாடியது பொய்யல்லவே.

“..பூமிக்கு நாம் ஒரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீரும் முன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர்கதையாகும்...”

“ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப் போல் ஒரு பழையதும் இல்லை
இரண்டுமில்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை....”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தாங்க முடியாத இழப்பான மரணத்தை எதிர்கொள்ளும் கொடிய தருணத்தில் மனதில் நிம்மதி சூழ்ந்திட பிரபலகவிஞர் வைரமுத்து எழுதிய கவிவரிகளில் சில.

ஜனனம் தற்செயலானது மரணம் நிச்சயமானது. அவர் இந்த அநித்தியமான உலகைவிட்டு நித்தியமான உலகிற்கு சென்றுள்ளார்.

பிறப்பு ஒரு சம்பவமாக இருந்திற்றபோதிலும் மரணம் ஒரு வரலாறாக இருக்கவேண்டும் என்பார்கள். அதனை அவர் சாதித்துக்காட்டியுள்ளார்.

"தக்கார் தகவிலார் என்பது
அவரவர் எச்சத்தால் பெறப்படும்"

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார்.

நல்ல பிள்ளைகளை இப்பூவுலகிற்களித்து பேரப்பிள்ளையையும் கண்டு இப்பூவுலகைவிட்டு பிரியாவிடை பெற்றுச் சென்றுள்ளார். ஆம். உண்மையில் அவர் ஒரு முதுசொம்.

அவர்தம் ஆத்மா சாந்தியடைவதாக.

சோதரன்.

விபுலமாமணி தேசமான்ய வி. ரி. சகாதேவராஜா **( JP)**
உதவிக்கல்விப்பணிப்பாளர், சிரேஸ்ட ஊடகவியலாளர். காரைதீவு செயலாளர், அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவை.
ஸ்தாபக உறுப்பினர், கல்முனைநெற் இணையம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் கண்ட அண்ணன் முகில்வண்ணன் (சண்முகநாதன்)

அன்பின் பிறப்பிடமாய்
அமைதியின் இருப்பிடமாய்
அறத்தில் சிறந்தவனாய்
அறிவில் மிகுந்தவனாய்
ஆற்றல் மிக்கவனாய்
பண்பில் உயர்ந்தவனாய்
பாசத்தை பொழிந்தவனாய்
பக்தியில் திளைத்தவனாய்
பன்மொழித் திறத்தவனாய்
பாண்டியூரின் சொத்தாய்
மிளிர்ந்த பெருந்தகை
சண்முகநாதன் பெரியோன்!.....

கதைகள் பல எழுதி
கவிதைகளும் தான் பொழிந்து
நயமிக்க நல்ல கட்டுரைகள்
நவீன நாவல்கள்
நனி சொட்ட புனைந்து
நல்ல பல நூல்கள்
நயமாக பதிவிட்டு வெளியிட்ட
புன்னகையாளன் புனிதன்
சண்முகநாதன் பெரியோன்!.....

இவை கண்டு தேவர்களும்
இவன் சேவை தேவையென்று
இங்கிதமாய் இறையிடம் கூறிடவே
காலனும் வந்து கண்ணியவானை
கண்ணியமாய் கடிதென அழைத்திடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியவானும் புன்னகை தவழ
பூவுலகம் விட்டு வானுலகம் சென்றானே!......

அணைந்தது குலவிளக்கு
விழுந்தது பேரிடி
தொலைந்தது மகிழ்ச்சி
இழந்தது பெரும் சொத்து
அழுதது இலக்கியம்
மீண்டும் வருவாரா
ஏங்கியது தமிழ் உலகம்!.....

ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்தவனாக.....
கலாபூஷணம் கா. சந்திரலிங்கம்.
(ஓய்வுநிலை அதிபர்)



கல்முனை நெற் ஊடக வலையமைப்பின் இயக்குனர் சபையின் மலர்க்குழுக் கூட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பின் நினைவுகளில்...

ஓர்இலக்கியவாதியாக மட்டுமன்றி ஒரு தொழில் நுட்ப உத்தியோ கத்தராக - வர்த்தகராக சமூக ஆன்மீக பணியாளராக தனது பன்முகங் களை காட்டியவர் முகில்வண்ணன் அவர்கள்.

முதலில் என் நினைவில் இப்படித்தான் வந்து சேர்ந்தார். கல்முனை பாத்திமா கல்லூரி நாட்களில் நீல நிற அரைக்கால்சட்டை வெள்ளை சேர்ட்டுடன் குனிந்த தலை நிமிராத ஒரு பாடசாலை மாணவனாக பாண்டிருப்பிலிருந்து பாடசாலைக்கு நிலம் பார்த்தே நடந்து செல்லும் ஒருவராகத்தான் அவரைக் கண்டிருக்கிறேன். அப்போது அவர் யாரேன்றெ எனக்கு தெரிந்திருக்கவில்லை.

அறுபதுகளில் வெளிவந்து கொண்டிருந்த தினபதி நாளிதழின் வாரப்பதிப்பான சிந்தாமணி இதழின் சிறுவர் மலர் பகுதியில் இவரது ஆக்கங்கள் வெளிவந்து கொண்டிருந்தன. பின்னர்தான் இவரது பெயர் சண்முகநாதன் எங்கள் ஊரைச்சேர்ந்த அருச்சுனர் வேலரின் மகன் என்பதை எனக்கு நானே அவரை அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

பாண்டிருப்பு சைவபரிபாலன சபை இந்து இளைஞர் மன்றமாக பெயர் மாற்றப்பட்டு இயங்கியபோது திரு இரத்தினவேல் ஆசிரியருக்குப் பின்னர் முகில்வண்ணன் தலைவர் பொறுப்பை ஏற்றார் நான் தொடர்ந்து செயலாளராக அவருடனும் செயலாற்றினேன்.

1977 ம் ஆண்டில் ஏற்பட்ட இனவாத முறுகல் நிலையின் நிமித்தம் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய தீப்பள்ளய உற்சவத்திற்கு மிக சொற்பமான தமிழ் பொலிசாரே கடமைக்கு வந்தனர். இந்த சந்தர்ப்பத்தில் இந்து இளைஞர் மன்றம் முற்று முழுதாக ஆலய பாதுகாப்பை கையிலெடுத்தது. தொண்டர் படை என்ற கட்டுக்கோப்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்ற அங்கத்தவர்கள் ஆலய முன்றலில் ஒரு காரியாலயம் அமைத்து செயல்பட்டனர். அப்போதே அவருடன் நெருங்கிப்பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. குழந்தை இலக்கியம் படைப்பவர் மட்டுமல்ல குழந்தை மனம்கொண்ட ஒருவர் என்பதையும் அவரது நட்பு எனக்கு நன்குணர்த்தியது.

இவரது அரசியல் கலை இலக்கிய நிலைப்பாடு என்பவற்றில் எனக்கு நிறையவே விமர்சனங்கள் இருக்கின்றன. ஒரு முறை என்னிடம் தனது நூல்கள் சென்னை புத்தக கண்காட்சியில் இடம்பெற்றிருக்கின்றன என்பதை பீற்றிக் கொள்ளாத ஒருவித தன்னடக்கத்துடன் அவர் கூறியபோது என்னுள் வியப்புகள் விரிந்தன.

தனது இறுதி நாட்களில் ஒரு ஆன்மீக செயல்பாட்டாளராக தனது பாரியாருடன் இணைந்து செயல்பட்டார்.அவரது பாரியாரின் பிரிவு அவரை பலமாக அடித்து வீழ்த்தியது என்றே சொல்ல முடியும். மனைவியை பிரிந்த வாழ்வை நீடிக்க விரும்பாமல் அவரும் இயற்கையோடு சங்கமமாகிவிட்டார்.

என்றும் மறவா நினைவஞ்சலிகளுடன்...

சபா சபேஷன்.
ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களமாய் வாழ்ந்த மனிதர்
# அமரர் வே.சண்முகநாதன் (முகில்வண்ணன்)

ஆயிரத்து தொழாயிரத்து தொண்ணூற்றேழில் நான் கல்முனை கல்வித் திணைக்களத்தில் மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய காலத்தில் வே.சண்முகநாதன் (முகில்வண்ணன்) எனக்கு அறிமுகம்.

வடக்கு கிழக்கு மாகாண, கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளரின் அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர்கள், படைப்பாளிகள், கலைஞர்கள் விபரங்களை ஆவணப்படுத்தும் செயற்றிட்டத்தை அப்போது முன்னெடுத்துக் கொண்டிருந்தேன். அந்தவேளை எழுத்தாளராக அறிமுகமான முகில்வண்ணன் தன்னைப்பற்றி முழு விபரங்களையும் வழங்கியிருந்தார். அவை அனைத்தையும் படித்து தொகுத்து மூத்த எழுத்தாளர் வரிசையிலே ஆவணக் கோவையில் இணைத்து அனுப்பியிருந்தேன், அதனை தொடர்ந்து எமது நட்பு விரியத் தொடங்கியது.

இவர் பழம்பெரும் பதியாம் பாண்டவர் பூமியாகிய பாண்டிருப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். பழகுவதற்கு இனிய பண்பாளராகவும் காணப்பட்டார். தினம் தோறும் பின்நேர வேளைகளில் எங்கள் நால்வர் கோட்டத்தை நாடிவருவார். இருவரும் நீண்ட நேரம் உரையாடி உறவாடி மகிழ்வோம். இலக்கியம், கலாசாரம், அறிவியல் ஆன்மீகம் எனப் பலகோணங்களில் எமது உரையாடல்கள் நீளும். சில வேளைகளில் அவரது துணைவியார் கண்மணி அக்காவையும் அழைத்து வருவார். சைவசமயல் கலையில் கை தேர்ந்தவர் அவர் துணைவியார், அவரோடு இணைந்து எனது துணைவியாரும், சமைத்து மகிழும் ஞாபகங்களை, பரிமாறி, பகுத்துண்டு, ருசித்து மகிழ்ந்த நாட்கள் மனதைவிட்டு அகலாதவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மிகதுறையில் அதிக நாட்டமுடைய முகில்வண்ணன், வெள்ளை யுடையில், கறுப்புக்கண்ணாடி அணிந்தபடி மோட்டார் சைக்கிளில் மனைவி சகிதம் வருகை தரும் தோற்றமும், விருந்துபசாரமும் செயற்பாடுகளும் சிக்கனத் தன்மையும் என்னை வெகுவாக கவர்ந் திருந்தது. அவரை எமது நால்வர் கோட்ட ஆன்மீகப் பணிகளில் இணைந்து கொள்ள வருமாறு அழைப்பு விடுத்தேன். அதை அன்போடு ஏற்றுக் கொண்ட அவர், சிலகாலம் சிறப்பான பணிகளை ஆற்றியமையை மறக்க முடியாது.

அக்காலத்தில் கல்முனையில் ஒரு தமிழ்ச் சங்கம் அமைக்கப்பட வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தார். இதில் ஆர்வமிக்க நாங்கள் கொழும்பு தமிழ்சங்க தலைவராக இருந்த கலாநிதி. மு.கதிர்காமநாதனைத் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற்றோம். அதன் பிரகாரம், அருட்சகோதரர், கலாநிதி மத்தியு, வித்திய சம்மான விஜய ஸ்ரீ. நாகராசா, கலாபூசணம் பரம நாதபிள்ளை, கலாபூசணம் இராமநாதன், கலாபூசணம் விநாயகமூர்த்தி, கலாபூசணம் அக்கரை பாக்கியன், கலாபூசணம் பொன்னுத்துரை போன்றோரை எல்லாம் இணைத்து தமிழ் சங்கத்தை அமைத்தோம், அதற்கான யாப்பையும் முகில்வண்ணரோடு தயாரித்து கலாசார அமைச்சில் பதிவு சான்றிதழையும் பெற்றுக் கொண்டோம். தமிழ் சங்கத்தின் பொருளாளர் பொறுப்பையும் முகில் வண்ணரே நிருவகித்தார். நூல் வெளியீடு பெரியோர் கௌரவிப்பு, கவியரங்கம், கதைசொல்லும் நேரம், அது ஒரு நிலாகாலம் (எழுத்தாளர் அனுபவப்பகிர்வு) கல்வி மேம்பாடு என பலநிகழ்வுகளை தமிழ்ச்சங்கம் மேற்கொண்டது அவை அனைத்திலும் முகில் வண்ணரின் பங்களிப்பு கணிசமானவையாக காணப்பட்டது.

இந்த வரிசையில் அவரது நூல்களான "இனியும் நான் இராமன்தான்" "செல்லக்கிளி" "ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலய வரலாறு" போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள் தமிழ் சங்க அனுசரணையில் நால்வர் கோட்டத்தில் வெளியீடு செய்யப்பட்டன. அத்தோடு பிரபல எழுத்தாளர் சண்முகம் சிவலிங்கம் அவர்களின் இரங்கல் நிகழ்வு அவர் மகன் திரு. வித்தியானி அவர்களின் அனுசரணையுடன் இடம் பெற்ற போதும் அமரர் பரமநாத பிள்ளையவர்களின் இரங்கல் நிகழ்வின் போதும் முகில் வண்ணன் முன்னின்று உழைத்தமையை மறக்கமுடியாதுள்ளது.

மூத்தஎழுத்தாளர் முகில்வண்ணன் அவர்கள் ஒரு பன்முக ஆளுமை கொண்டவர். பலவகையான நூல்களை எழுதக்கூடியவர். பலவிதமான பதிவிகளை வகித்தவர், பலவிதமான பட்டங்களையும் விருதுகளையும் வென்றவர். ஆக்கத்தின் அளவு கருதி, அவற்றை இங்கு விபரிக்க முடியாதுள்ளது. இத்தகைய சிறப்பு மிக்கவரின் ஆக்கங்கள் மேலும் நூல்வடிவம் பெற அவரது உறவினர்கள், வெளிநாடுகளில் வதியும் அவரது புத்திரர்கள் முன்வரவேண்டும் எனக் கேட்டுக் கொள்வதோடு,

இம்மலரை அழகுற வடிவமைத்த கல்முனைநெற் ஊடக குழுமத்துக்கு நன்றி பாராட்டி, அன்னாரின் ஆத்மா, பேரின்ப பெரு வாழ்வு பெற எல்லாம் வல்ல எம் பெருமானைப் பிரார்த்திக்கிறேன்.

சுபம்.

"லோகா சமஸ்த்த சுகினோ பவந்து"

கலாநிதி பரதன் கந்தசாமி **(JP)**
(ஓய்வுநிலை கோட்டகல்விப் பணிப்பாளர்)
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியை உயிராய் நேசித்த பெருமகன்...!

"பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும்
நற்றவ வானில் நனி சிறந்தனவே"

பிறப்பால் ஒரு மனிதனுக்கு கிடைக்கும் உரிமைகளுள் மொழியும், மதமும் தலையாயது இறக்கும்வரை தன் மொழிக்காகவும் மதத்திற்காகவும் உழைக்க வேண்டியது பிறப்பு உரிமையாகும். அதற்கு முன்மாதிரியாக வாழ்ந்தவர் அமரர் வே.சண்முகநாதன் அவர்கள் அவர் ஒரு இலக்கிய வாதியாக பல படைப்பாக்கங்களை எழுதி வெளியிட்ட வே.சண்முகநாதன் அவர்கள் முகில்வண்ணன் எனும் புனைப்பெயரில் பிரபல்யம் பெற்றவர்.அவர் பொறியியலாளராக தொழில் புரிந்து மும்மொழியில் பெற்றிருந்த தேர்ச்சியானது இவரின் பன்முக ஆளுமையை பிரதிபலிக்கின்றது.

இவர் சிறந்த ஆன்மீக செயற்பாட்டாளர். இல்லத்தில் தன் கடமைகளை செவ்வனே நிறைவேற்றி தானும் தன் துணைவியாரும் பிரம்மகுமாரிகள் இராஜயோகத்தில் முழுமையாக இணைந்து கொண்டார்கள். இருவரும் வெள்ளை ஆடையுடன் அதிகாலையில் நடைபெறும் தியானத்தில் பங்கு கொண்டு ஒன்றாக மோட்டார் சைக்கிளில் வீடு செல்வது தினமும் யாம் காணும் மனதிற்கினிய காட்சியாகும். பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரகஸ்தம், சந்நியாசம் என்பது ஒரு மனிதன் வாழ்நாளில் கடக்க வேண்டிய நான்கு படிநிலைகளாகும். அதனைக்கடைப்பிடித்த ஒருவராக முகில்வண்ணன் விளங்கினார்.

சமய இலக்கியங்களான திருவாசகம், கந்தசஷ்டி கவசம் என்பவற்றை சிங்கள மொழியில் மொழிபெயர்த்த பெருமையும் பெற்றவர். இவர் ஆற்றிய கலை இலக்கியப் பணிகளுக்காக கலாபூசணம் விருதைப்பெற்றவர். இவர் தன் சொந்த வாழ்விலும் சரி பொது வாழ்விலும் சரி தனது சுயத்தை இழக்காத தனித்துவமானவர்.தன் கருத்தை யாருக்கும் திணிக்கமாட்டார். பிறர் கருத்துக்களை நீதிக்கு மாறாக ஏற்கவும் மாட்டார். வீணான சச்சரவுகளில் தலையிடாது விலகியிருந்து தன் வேலையை சிரத்தையுடன் மேற்கொள்ளும் சாதூர்யம் இவரிடம் எனக்குப் பிடித்த மிகச்சிறந்த பண்பாகும். இவரது அந்திம காலத்தில் இவருடன் நெருங்கி பழகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பு எனக்குக் கிட்டியிருந்தது. முகில்வண்ணன் அவர்கள் வெளியிட் டிருந்த மூன்று நூல்களின் வரரவேற்புரை நிகழ்த்துவதற்கு என்னை அழைத்திருந்தார். அழைப்பிதழில் என் பெயரை அச்சிட்டு எனக்கு அழைப்பிதழ் தரும்போதுதான் கூறினார் நீங்கள் தான் வரவேற்புரை நிகழ்த்த வேண்டும் என்று அந்தளவிற்கு அவரின் நம்பிக்கையை பெற்றவனாக இருந்ததில் மிகவும் மகிழ்வுற்றேன்.

அமரர் முகில்வண்ணன் அவர்கள் தான் மிகவும் நேசித்த பாண்டிருப்பு மண்ணின் மடியில் விதையானது அவர் பெற்றபேறுதான் அன்றி வேறில்லை.அன்னை துரௌபதைக்கு பல பணிகளை செய்திடவேண்டும் என்ற வேட்கையுடன் இருந்தவர்.இவரது மரணம் நிகழும் போது துரௌபதை தாயாரின் ஆண்டு உற்சவத்திற்காக திருக்கதவு திறந்து மூன்றாம் நாளாகவிருந்தது.

பஞ்ச பாண்டவர் ஊரில் அருச்சுனர் குடும்பத்தின் முகவெற்றிலையாக முகில்வண்ணன் விளங்கிவந்தார்.நேர் சிந்தனையாகவே எதையும் பார்க்கும் அன்னாரது பிரிவால் ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது அன்புப் புதல்வர்கள் ஆசை மருமக்கள் பாசமிகு பேரப்பிள்ளைகள் அனைத்திலும் கலந்திடும் அன்புமிக்க உறவினர்கள் அன்னாரின் பாசமிகு தோழமைகள் ஆகிய அனைவருக்கும் என் வார்த்தைகள் ஆறுதலாய் அமைந்திடட்டும்.அன்னாரின் ஆத்மா பரமாத்மாவுடன் இணைந்து ஆனந்த வாழ்வைப் பெற்றிடட்டும்.

ஓம் சாந்தி..... ஓம் சாந்தி ..... ஓம் சாந்தி......

மா.லக்குணம்
(சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்)
பாண்டிருப்பு – 01
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்முகிலே..!

அவருடைய நாவலொன்றின் பதிப்புரையில் இருந்து ஒருவரி "புத்தகம் இல்லாவீடு ஜன்னல் இல்லா அறை" போன்றது. எந்த வீட்டில் நூலகம் இருக்கின்றதோ இந்த வீட்டில் ஆன்மா இருக்கின்றது. இது பிளேட்டோவின் வைரவரி இவ்வரி முகில்வண்ணன் ஐயா அவர்களுக்கும் சாலப் பொருந்தும். எப்போதும் புன்முறுவல் தவழும் முகம், சாந்தம் மிதந்து கிடக்கும் விழிகள், அமைதியான, கனிவான வார்த்தைகள் அவரை நான் ஐயா என்றே அழைப்பேன். என்னை தம்பியென்று உரிமை கொண்டாடுவார். இலக்கியம், ஆன்மீகம், தியானம் தன் கடந்த கால அனுபவச்சிதறல்கள் என விரியும் அவரது சிலாகிப்புக்கள் ஒரு பொறியியலாளனுக்குள் இப்படி ஒரு பிரம்மாவா என்று நான் வியந்ததுண்டு அதற்குப் அப்பால் மனிதநேயம் மிக்க ஒரு பண்பாளராக அவரைப் பார்த்தேன். தாய்நாட்டின் மீதான அவலங்கள் இதன் இனத்தின் மீதான அடக்குமுறைகள், அவரை அதிகமாக பாதித்திருந்தன.

2006 "ஆனந்தக்கண்ணீர்" நாவலில் இப்படி ஒரு குறிப்பை பதிவு செய்கிறார்.கெளதம புத்தர் உயிருள்ள உடலில் இருக்கும்போது பரப்பிய அதிர்வலைகளையே அவரது உயிரற்ற சிலைகளும் பரப்பிக் கொண்டிருக் கின்றன. இதனை உணர்ந்து அனுபவிக்க சிங்கள மக்கள் தலைப்பட்டால் நாட்டில் இனப்பிரச்சினை இல்லையென்றாகிவிடும். இது அவரது ஆதங்கத் தின் வெளிப்பாடு. சிங்கள மொழியில் ஆழமான புலைமை கொண்டவர் திருவாசகம், கந்தசஷ்டி போன்ற அரிய பொக்கிசங்களை சகோதர மொழிக்கு வழங்கிய வள்ளலவர். தேசிய விருதும் பெற்றவர். மூத்த எழுத்தாளர். காலாபூசணம், வித்தகர் எனப் போற்றப்பட்டாலும் அமைதியாக வாழ்ந்து பெருமைகள் பலவற்றை சேகரித்த கலைப் பெட்டகமாவர். கண்மணியம்மாவுடன் கருத்தொருமித்து வாழ்ந்திருந்தார். துணைவியாரின் பிரிவு அவரைப் பெரிதும் பாதித்தது. அதன் விளைவு இணைபிரியா அன்றில்களாய் பரமன் தாழ்களில் அர்ப்பண மலர்களாயினர். வான் மழை போல் உளம் கொண்ட முகில் வண்ணன் ஐயா.

உம் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றேன்.

ஜே. டேவிட்
பைந்தமிழ்க்குமரன்,
பிள்ளையார் கோயில் வீதி,
பாண்டிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பிரதேசத்தின் அடையாளங்களில் ஒருவர்...

இலக்கியவியலாளர், ஆன்மீகவாதி, சமூகசேவகர், தொழிலதிபர், பொறியியலாளர் என பன்முக ஆளுமை கொண்ட அமரர் முகில்வண்ணன் இப்பிரதேசத்தின் அடையாளங்களில் ஒருவர். அவரின் இழப்பு இப்பிரதேசத்தில் வெற்றிடமே.

கல்முனை நெற் ஊடக வலையமைப்பின் ஸ்தாபகர் சபை உறுப்பினராக ஆரம்பகாலம் முதல் எங்களோடு கைகோர்த்து செயற்பட்ட ஒருவர். சிறந்த ஆலோசனைகளை வழங்குபவர் யாரையும் முரண்படாத சாதுவான போக்கு கொண்ட சிறந்த நிருவாகத்திறன் உடையவர்.

“கணேஸ் அப்பப்பா” என நான் அழைக்கும் அமரர் முகில்வண்ணன் எனக்கு குடும்ப உறவினராக இருந்தாலும் அவ்வப்போது சந்தித்து உரையாடும்போது பொது விடயங்களையே அதிகமாக பேசுவோம் அவர் ஒரு இலக்கியவாதி என்பதாலும் நானும் ஊடகத்துறை சார்ந்தவன் என்பதாலும் எமது உரையாடல்கள் அவ்வாறே நீண்டு செல்லும். எங்கள் உரையாடலை அமைதியாக இருந்து செவிமடுத்துக் கொண்டிருப்பார் அன்னாரின் மனைவியான கண்மணி அம்மா.

சுமார் ஐந்து வருடங்களின் முன்பு நாங்கள் உரையாடிக்கொண்டிருந்த சமயம் எனது எண்ணத்தில் உதித்த ஒரு சிந்தனையை தெரிவித்தேன் . கல்முனை பிரதேசத்திற்கென தனித்துவமான ஊடகம் ஒன்று அவசியம் அதனூடாக எமது பிரதேச செய்திகளை உலகெங்கும் பரவி வாழும் மக்களுக்கு எடுத்துச்செல்லலாம். அத்தோடு செய்தி என்பதோடு அல்லாமல் இப்பிரதேச கலைஞர்களை ஊக்குவிக்கும் ஒரு கருவியாகவும் செயற்படவேண்டும் என்று கூறினேன்.

அதற்கு தனது சிறந்த பல ஆலோசனைகளை வழங்கி என்னை ஆசிர்வதித்தார். அன்று இட்ட புள்ளியே இன்று கல்முனை நெற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் ஊடகம் விருட்சமாக வளர்ந்து நிற்கின்றது. இறுதிவரை கல்முனை நெற் ஊடக வலையமைப்போடு கைகோர்த்து செயற்பட்டார்.

"கல்முனை நெற்" செய்திகளுக்கப்பால் கலைஞர்களை ஊக்குவிக்கும் பல நிகழ்வுகளை நடாத்தியுள்ளன. நான்கு வருடங்களின் முன்பு அமரர் முகில்வண்ணன் அவர்களின் மூன்று நூல்களை கல்முனை நெற் ஊடக வலையமைப்பு கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடத்தியிருந்தது.

அந்த வகையில் அன்னார் வாழும்போதே அவரின் இலக்கிய பயணத்தில் எமது சிறு கைகோர்ப்பும் இருந்துள்ளது என்பதை எண்ணி ஆறுதல் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா இறையடியில் ஆறுதல் கொள்ள பிரார்த்திக்கின்றோம்.

பு. கேதீஸ்
ஸ்தாபகர்,
கல்முனை நெற் ஊடக வலையமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








நினைவின்
நிழல்கள்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







நினைவின்
நிழல்கள்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாந்தரமாக ஓடிக்கொண்டிருந்த இரயில்...

அமரத்துவமடைந்த முகில்வண்ணன் அவர்கள் முதன் முதலில் "எலட்ரோண்" என்றே பெயராலேயே எனக்கு அறிமுகமாகியிருந்தார். நாங்கள் வசித்த தெருவுக்கு அடுத்த தெருவில்தான் அவரது வீடு இருந்தது. எனது வீட்டிலிருந்து இடஞ்சுழியாக ஒரு "பானா: நடந்தால் அவரது இல்லம். 90களில் பரபரப்புடன் வெளிவந்து கொண்டிருந்த "தினமுரசு" என்ற வார சஞ்சிகையில் "பாண்டியூர் முகில்வண்ணன்" என்ற பெயரில் அவரது கதைகள் சில வெளிவந்தபோது "யார் இந்த முகில்வண்ணன்?" என்ற எங்கள் கேள்விக்கு விடையாக "எலட்ரோண்", சண்முகநாதன், முகில்வண்ணன் என்பதெல்லாம் ஒருவர்தான் என்ற சமன்பாடே பதிலாகக் கிடைத்தது.

நானும் அவரைப்போல் இலக்கியத்தின் மீது ஈடுபாடு கொண்டவனாக இருந்தபோதிலும் அவருக்கும் எனக்கும் இடையில் பெரிய உறவுப்பாலம் என்று எதுவும் இருந்ததில்லை. ஒரு பேரூந்தின் யன்னல் பக்கமாக இருந்துகொண்டு பிரயாணம் செய்து கொண்டிருக்கும் சிறுவன் ஒருவன் அவன் பயணிக்கும் பாதைக்குச் சமாந்தரமாக உள்ள தண்டவாளமொன்றில் அதே திசையில் ஓடிக்கொண்டிருக்கும் மிக நீளமான இரயிலை பார்த்து ரசித்தபடியே பயணிப்பது போன்ற அனுபமே எனக்கிருந்தது. இவ்வாறு தூர இருந்த படியே அவரது செயற்பாடுகளை அவதானித்து வந்திருக்கின்றேன். அவரை தெருக்களில் காண நேரும்போது "பந்தா" இல்லாத அவரது மெல்லிய புன் சிரிப்புக்கு ஒரு மரியாதைக்குரிய மாணவன் போல பணிவுடன் எனது தலை அசைந்திருக்கின்றது. மற்றும்படி அவருடைய கதைகளைப் படித்து விட்டு, அவரை தேடிச் சென்று, அக்கதைகள் பற்றி ஒருபோதும் நான் கருத்துத் தெரிவித்ததில்லை. அதேபோல எனது ஒரு கதையையாவது அவர் இதுவரை படித்து விட்டு, அதுபற்றி என்னிடம் தனது மதிப்பீட்டை வெளிப்படுத்தியதுமில்லை. இந்த பெடியன் யாருடைய மகன் என்று அவர் இதுவரை விசாரித்ததாகவும் நான் அறியேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றே மூன்று தடவைகள் மட்டுமே அவரை அவரது இல்லத்திற்குச் தேடிச் சென்று நான் சந்தித்திருக்கின்றேன். ஆனால் மறுமலர்ச்சி சனசமூக நிலையத்தின் தலைவரும் அன்புக்குரிய நண்பருமான திரு.பா.செ.புவிராசா அவர்களைச் சந்திப்பதற்காக அவரது இல்லத்திற்கு நானும் எனது நண்பர்கள் சிலரும் அடிக்கடி செல்வதுண்டு. அந்தச் சந்தர்பங்களில் முகில்வண்ணனை அவரது வீட்டு முற்றத்தில் நாங்கள் காண நேர்ந்தாலும் அவர் எங்களோடு உரையாடுவதில்லை. அவரது சுபாவமே அதுதான். அவரது தர்க்கத்தின் பக்கம் அல்லது அவரது அணியில் தனது மந்திரக் கயிற்றினால் எவரையும் வலிந்து பிணைக்கின்ற நோக்கம் அவரிடமிருந்ததாக நான் உணரவில்லை. இலக்கியத்தினைப் பொறுத்த மட்டில் அவர் பலருடன் தொடர்புகளைக் கொண்டிருந் தாலும் ஒற்றைக் கிளையில் தனித்தபடியிருந்து கூவிக்கொண்டிருந்த புள்ளிக் குயில் என்றே அவரை எண்ணத் தோன்றுகின்றது.

இதுவரை எமது பிரதேசத்தில் அதிகூடிய நூல்களை எழுதியவர்கள் என்றால் ஒன்று - அமரத்துமடைந்த அருட்சகோதரர் எஸ்.ஏ.ஐ.மத்தியூ அடிகளார் அவர்கள். மற்றது முகில்வண்ணன் அவர்கள். முகில்வண்ணன் சுமார் முப்பது நூல்களை எழுதியுள்ளார். இது எழுத்தின் மீது அவருக்கிருந்த ஓயாத ஈடுபாட்டையும் தனது எழுத்தின் மீது அவர் கொண்டிருந்த திருப்திகரமான சுய மதிப்பீட்டையும் எடுத்துக் காட்டுகின்றது.

எங்கள் கிராமத்தில் இவருக்கும் ஒரு உயர்வான மதிப்பு இருக்கின்றது. நாலு விடயங்களை அறிந்த ஒரு நல்ல மனிதன். மூன்று மொழிகள் தெரிந்த ஒரு புலமையாளன். வீட்டுக்குள் இருந்த படியே பிறருக்கு வேதம் ஓதிக்கொண்டிருக்காமல் தன்னால் முடிந்த அளவுக்கு இலக்கியம், ஆன்மீகம், சமூக மேம்பாடு போன்ற தளங்களில் அமைதியாக இயங்கிக் கொண்டிருந்த ஒருவர். எமது கிராமத்தில் - காலத்தின் விசப்புடையன்களுக்குப் பயந்து தன் குஞ்சுகளை உரிய வேளையில் பொறுப்போடு உயரக் கிளைகளில் கூடுகட்டி காத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கணாங் குருவிகளில் ஒருவராகவும் வேறு வழியின்றி 90க்குப் பின்னர் சமூக முன்னேற்றம் தொடர்பில் தனது செயற்பாட்டை அடக்கி வாசித்த நபராகவும் இவரை கொள்ளமுடியும். சந்தானம் நிறைந்த இவர், தனது உறவுகளைக் அன்பாகக் கட்டியாண்டதனால் அப் பரம்பரையின் மதிப்புமிக்க தலைமகனாக விளங்கினார்.

2003ஆம் ஆண்டு கவிஞர். பாண்டியூரனின் கவிதைகளை தொகுதியாக வெளியிடுவதற்கு "வாழ்வியம்" என்ற அமைப்பினூடாக நாங்கள் முயற்சி மேற்கொண்டபோது, அன்னாரின் பிரசுரமான கவிதைகள் ஏதாவது முகில்வண்ணன் அவர்களிடம் இருக்கலாம் என்ற எண்ணத்தில் அவரது வீட்டுக்குச் சென்றிருந்தோம். அப்போது பாண்டியூரனின் படைப்புகள் கட்டாயம் வெளிவரவேண்டும் என்ற தனது விருப்பத்தை அவர் எத்தி வைக்கத் தவறவில்லை. உடனே அறை ஒன்றுக்குள் சென்று, தன்னிடமிருந்த ஒரு கோவையிலிருந்து பாண்டியூரனின் இரண்டு பிரசுரமான கவிதைகளை எடுத்துவந்து எங்களிடம் தந்தார். கொழும்பு "அருட்சுவடிகள்" திணைக்களத்தின் நூலகத்தில் பாண்டியூரனின் கவிதைகளைத் தேடிப் பெறலாம் என்ற ஆலோசனையையும் அவர் முன்வைத்தார். ஆனால் இந்த முயற்சி இன்றுவரை கைகூடவில்லை.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் 2017ஆம் ஆண்டு பிரதேச கலாசார விழாவை நல்ல முறையில் நடாத்தியிருந்ததுடன் **"முனையம்"** என்ற சிறப்பான கலாசார மலர் ஒன்றினையும் வெளியிட்டிருந்தது, இம் மலருக்காக எழுத்தளரும் அன்புக்குரிய அண்ணனுமான திரு. உமா- வரதராஜன் அவர்களின் உந்துதல் காரணமாக **"கல்முனை பிரதேச சிறுகதை மற்றும் நாவல் முயற்சிகள்"** என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தேன். அந்தக் கட்டுரையில் முகில்வண்ணன் தொடர்பான நான் முன்வைத்த கருத்துக்கள் சிலவற்றை மீண்டும் இங்கே பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

எமது பிரதேசத்தில் அதிகளவான சிறுகதைகளை எழுதியவர் இவரே என்று தோன்றுகின்றது. அவளும் ஒரு தமிழ் பெண், இனியும் நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமன்தான், நீறுபூத்த நெருப்பு போன்றன இவரது சிறுகதைத் தொகுதிகளாகும். முகில்வண்ணனின் கதைகள் பெரிதும் குறுகியவை. தனது தனிப்பட்ட அனுபங்கள் சிலவற்றையும், சூழலிலிருந்து தேர்ந்தெடுக்கும் சில சம்பவங்களையும் கதைகளாக தந்துள்ளார். சிறுகதையில் கரு அல்லது கதை மட்டுமே இவருக்கு முக்கியமாகப் படுகின்றது. ஒரே விதமான கதைசொல்லும் பாணியையும் சிக்கலற்ற மொழியையும் இவர் தொடர்ச்சியாக நம்பி வருகின்றார். தனது கதைகளுக்கூடாக ஏதாவது ஒரு செய்தியை வாசகனுக்குச் சொல்லத் துடிக்கின்றார். மீண்டும் மீண்டும் பழக்கப்பட்ட ஒற்றையடிப் பாதையிலே பயணம் செய்வது இவருக்கு ஆறுதலளிக்கின்றது. வாசகனின் கைகளைப் பற்றிக்கொண்டு, விறுவிறுவென்று முன்வாசல் வழியாக கதைகளுக்குள் கூட்டிச் செல்கின்ற தன்மை இவருடையது. இவ்வாறான கதைகள் ஆரம்ப நிலை வாசகர்களை அதிகம் கவர்ந்து விடுகின்றன. இதனாலோ என்னவோ முகில்வண்ணன் இவர்களுக்கான மழையை பாட்டம் பாட்டமாகப் பெய்திருக்கின்றார். கதையின் அழகியல், படைப்பாளியின் சுய பார்வை, மற்றும் துணிச்சல், பரீட்சார்த்த மொழி, என பல எதிர்பார்ப்புகளை கொண்டுள்ள இன்றைய இலக்கியச் சூழலில் எதைப் பற்றியும் கவலை கொள்ளாது தனது இயல்புக்கேற்ப கொத்துக் கொத்தாய் பூத்திருக்கிறார் முகில்வண்ணன்.

எமது கிராமத்தில் முகில்வண்ணன் அவர்களின் சேவையையும் மனதில் கொண்டு எமது மறுமலர்ச்சி சனசமூக நிலையம் கடந்த 2018ஆம் ஆண்டு தனது எழுபதாவது ஆண்டு நிறைவு விழாவில் அவரையும் பாராட்டி கௌரவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அன்னாரின் மறைவு குறித்து எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதுடன் அவருக்கான நினைவு மலரில் அவர் பற்றிய எனது குறிப்புக்கும் வாய்ப்பளித்த “கல்முனை நெற்” ஊடக வலையமைப்பிற்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி.

**சிவ - வரதராஜன்**
**பாண்டிருப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியுறுவோம்..!

முறையில் முகில்வண்ணன் மைத்துனன் எனக்கு
கறையில்லா எழுத்தாளன் கற்பனையில் வல்லோன்
நிறைவாக எழுதியவன் நேரிய இலக்கியத்
துறையில் நிமிர்ந்தவன் நீள்துயில் ஆயினன்

நாடகத் துறையில் நடைபயின்றவன்
பூடகம் பேசாத சண்முகநாதன் புன்சிரிப்பாளன்
வாடாத மலர்களாய் சிறுகதைகளை வடித்தவன்
ஓடமாய் ஓடித்திரிந்தவன் ஓய்ந்தனன் இன்று

நாவல் ஆசிரியனாய் நம்மைக் கவர்ந்தவன்
தூவல் இல்லாத தனித்தன்மை வாய்ந்தவன்
காவலனாய் இல்லறம் காத்த தலைவன்
கோவாக வாழ்ந்து கூவாது மறைந்தனனே

தரியாது மறைந்த தலைவனை நினைத்துருகும்
பரிவான மனைவி மக்கள் பாசங்களே
பிரிவென்பது புவியில் பிறந்த எல்லோர்க்கும்
உரியதாம் என்பதை உணர்ந்து அமைதியுறுவோம்

வித்தகனே பாண்டியூரில் விளைந்த கலாபூசணமே
முத்தாகப் பூத்தவனே முகில் வண்ண மைத்துனனே
சத்தாக எழுத்துலகில் சரித்திரம் படைத்தவனே
அத்தனை மறவாது அவரடி அமர்ந்திடுவாயே..

இரா.கிருஷ்ணபிள்ளை (இராகி)

காரைதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் முகில் வண்ணன் நினைவாக.....

பாண்டிருப்பு தந்த பண்பான எழுத்தாளர்
முகில் வண்ணன் இங்கே எல்லார்க்கும் நல்லவர்!
செந்தமிழ் ஆற்றலால் சிறப்புக்கள் செய்தவர்!
அன்பாகப் பேசி அனைவரையும் கவர்ந்தவர்
முகில்வண்ணன் ஒரு முக்கிய எழுத்தாளர்!

எத்தனையோ நூல்களை எழுதிப் பதிப்பித்து
ஐந்தாறைய் சேர்த்து அடிக்கடி வெளியிட்டு வெற்றி கண்டார்!
சிறுகதைகள் கவிதை சிந்தனைக் கட்டுரைகள்
தந்து மகிழ்ந்து தனித்துவத்தை வளர்த்தார்
எமைப் பிரிந்து இறையடி சேர்ந்திட்டார்.
முகில்வண்ணன் ஆத்மா சாந்தி அடைந்திட
உள்ளத்தால் வேண்டுகிறோம் உறவுகள் வாழ்க!

வாசகரைக் கவர்ந்த வளமான கவிஞர்
தெள்ளிய தமிழ்மொழி திசைஎட்டும் பரவட்டும்
முகில்வண்ணன் ஆத்மா சிவனடி சேர்ந்திட
வேண்டுகிறோம் வெற்றிகள் மலரட்டும்
ஆசைத் தமிழ் வாழ அனுதினமும் உழைப்போம்!
பாசத்தோடு சிறந்த படைப்புகளை வளர்ப்போம்.

மு. சடாட்சரன்.
29.09.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகிழும் முகில்வண்ணன் நினைவுகள்

எழுத்தாளர் அமரர் முகில்வண்ணனுக்கும் எனக்கும் இடையிலான உறவும் ஊடாட்டமும் அரை நூற்றாண்டு காலத்தைக் கடந்தது. 1970களில் நான் கல்முனை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் தொழில்நுட்ப உதவியாளராகப் (T.A) பணியாற்றிக் கொண்டிருந்த சமகாலத்தில் அவர் கல்முனைக் கட்டிடத் திணைக்களத்தில் அதே தொழில்நுட்பத் தரத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். இரு திணைக்களங்களின் அலுவலகங்களும் கல்முனையில் அருகருகே இருந்தது. அதனால் அடிக்கடி முகமன் கூறிச் சந்தித்துக் கொள்வோம்.

அதற்கு முன்னர் அறிந்திருந்தேன் நான் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் முகில்வண்ணனின் தமக்கையார் பொத்துவில் வைத்தியசாலையில் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் பொத்துவில் வட்டிவெளியில் அமைந்துள்ள எனது தமக்கையார் வீட்டிலேயே வாடகைக்குத் தங்கியிருந்தார் தமக்கையாரைச் சந்திப்பதற் காகத் தம்பி சண்முகநாதன் (முகில்வண்ணன்) பொத்துவிலுக்கு வந்து போவதுண்டு. அவ்வேளைகளில் இன்னாரின் தம்பி என அவரை நான் அறிந்திருந்தேன்

பின்னாளில் திருமணபந்தம் காரணமாக எனது உறவுக்காரராகவும் மாறிவிட்டார். அவருடைய மனைவியின் தங்கையை திருமணம் செய்திருப்பவர் கவிஞர் காசி ஆனந்தன் தம்பி சுதர்சன் அவருடைய சகலன். காசி ஆனந்தன் துணைவியார் எனது மனைவியின் தமக்கை இதுதான் அந்த உறவு முறை.

மேலும் முகில்வண்ணனின் இன்னொரு சகலன் அமரர்.த.மகேஸ்வரனும் நானும் 1990 - 2000 காலப்பகுதியில் தீவிரமாகவும் நெருக்கமாகவும் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தில் பணியாற்றியவர்கள். பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கம் நிறுத்திய சுயேட்சைக் குழுவுக்கு தலைமை தாங்கி நான் போட்டியிட்டபோது என்னுடன் சக வேட்பாளராகக் களத்தில் நின்றவர் அமரர் மகேஸ்வரன் அவர்கள்.

எழுத்துத்துறையில் ஈடுபடுபவர்களுக்கிடையே ஓர் ஈர்ப்பும் உறவும் ஊடாட்டமும் இருந்து கொண்டேயிருக்கும். அத்தகைய ஓர் உன்னதமான உறவும் முகில்வண்ணனோடு எனக்கு இருந்தது. கல்முனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச்சங்கத்தினுடனான எனது ஊடாட்டமும் இதில் உள்ளடங்கும் 30.01.2008 இல் தோற்றம்பெற்று என்னை ஆசிரியராகக் கொண்டு 2013 ஜனவரி வரை அறுபத்தியொரு இதழ்களை விரித்த "செங்கதிர்" கலை - இலக்கிய - பண்பாட்டுப் பல்சுவை திங்களிதழின் ஐம்பத்தெட்டாம் வீச்சின் (ஒக்டோபர் 2012) அட்டைப்பட அதிதியாய் முகில்வண்ணன் அலங்கரித்திருந்தார். இப்படிப் பலவழிகளாலும் அவர் எனக்கு நெருக்கமான ஒருவராக அரை நூற்றாண்டு காலத்திற்கு மேல் விளங்கினார்.

கல்முனை தமிழ் சங்கம் வெளியிட்ட எழுத்தாளர் முகில்வண்ணனின் சிறுகதைத் தொகுதியான 'இனியும் நான் ராமன் தான்' வெளியீடு கல்முனை நாவலர் கோட்ட தாமரை மண்டபத்தில் 09.04.2011 அன்று நடைபெற்றபோது நூலின் ஆய்வுரையை நானே நிகழ்த்தியிருந்தேன். அப்போது நான் கூறிய, "ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் குறிப்பாக மட்டக்களப்பு மாநிலச் சிறுகதை வரலாற்றில் முகில்வண்ணன் அவர்களுக்கும் முக்கிய இடமுண்டு" என்ற கூற்றினை இப்போது நினைவு கூருகிறேன்.

மட்டக்களப்பு செங்திர் இலக்கியவட்டமும் மற்றும் மட்/பொது நூலகம் வாசகர் வட்டமும் இணைந்து நடாத்திய முகில்வண்ணனின் "செல்லக்கிளி" நாவலின் வெளியீடு 11.09.2011 அன்று மட்/பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அந்நிகழ்வில் வரவேற்புரையை வழங்கிய நான் அன்று கூறிய "மட்டக்களப்பு பிரதேசத்தின் முதல் நாவல் மட்டக்களப்பு தாமரைக்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட வே.ஏரம்புமுதலி என்பவரால் எழுதப்பெற்ற அரங்கநாயகி எனும் நாவலாகும் 1934 இல் வெளிவந்த இந்நாவல் ஆங்கிலக் கதையொன்றின் தழுவலாகும். ஆனால் மட்டக்களப்புப் பிரதேசத்தைக் களமாக்க கொண்டு மட்டக்களப்புப் பிரதேச மண்வாசனை நாவல்கள் வெளிவரத் தொடங்கியது 1970களின் பின்னரே. அந்தவகையிலே முகில்வண்ணனின் 'செல்லக்கிளி" எனும் இந்நாவலின் மூலம் மட்டக்களப்புப் பிரதேசத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நாவலாசிரியர்களின் பெயர்களின் வரிசையில் முகில்வண்ணனும் இடம்பெறுகிறார்" என்ற கூற்றையும் இப்போது நினைவு கூருகிறேன்

செங்கதிரோன் த. கோபாலகிருஸ்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நினைவின்
நிழல்கள்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நினைவின்
நிழல்கள்...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகில்வண்ணனின் இறப்பும், இழப்பும்...

முகில்வண்ணன் இறந்துவிட்டார்... என்று ஒற்றைவரிச் செய்தியொன்று 17.09.2020 இல் தொலைபேசியூடாக எனக்குக் கிடைத்தது.

பாண்டிருப்புக் கிராமத்தில்......

கல்முனைப் பிரதேசத்தில்........

இலங்கைத்தீவில்........

இன்னும் சொல்லப்போனால் தமிழர் வாழும் உலக நாடுகள் பலவற்றிலும் முகில்வண்ணன் என்னும் இலக்கியப் புனைப்பெயரில் அறியப்பட்டு தனக்கென ஒரு வாசகர் வட்டத்தைக் கொண்டிருக்கும் திரு.சண்முகநாதன் ஐயாவின் மரணச் செய்தியானது இவ்வாறு ஒற்றை வரியில் பதிவு செய்யப்படக்கூடியதொன்றா? என்ற கவலை எனக்குள் இழையோடிற்று.

பல துறைகளிலும் ஆளுமை கொண்ட திரு.வே.சண்முகநாதன் அவர்கள் பொறியியலாளராக கடமை புரிந்தவர். தனது இறுதிக் காலப்பகுதியில் முழுநேர ஆன்மீகவாதியாக வாழ்ந்த போதிலும் பொதுச்சேவைகளிலும், இலக்கியப்பணிகளிலும் அவர் தடம்பதிக்கத் தவறவில்லை. ஏனைய படைப்பாளிகளைப் போல் ஓரே துறையில் அல்லாது சிறுவர் இலக்கியம் . கவிதைகள் . சிறுகதைகள் மற்றும் நாவல்கள் என அனைத்து வகையான புத்தகங்களையும் எழுதிக் குவித்தார்.

சிறுவர் இலக்கியத் தொகுப்பில் 05 இனையும், கவிதைத் தொகுப்புக்கள் 11 இனையும், சிறுகதைத் தொகுப்புக்கள் 08 இனையும், நாவல்கள் 08 இனையும் இதுவரை அவரால் அச்சுறப்பெற்று வெளியிடப் பட்டனவையாகும். இது எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை சாதனையேயன்றி வேறில்லை. அவர் தமிழ்மொழியில் மட்டுமன்றி சிங்கள மொழியிலும், ஆங்கிலத்திலும் சிறப்பாக எழுதக்கூடிய வல்லமையைக் கொண்டிருந்தமை இவருக்கு மேலதிகமாக இருந்த தகைமைகளாகும்.

இவரது இலக்கியப் பணியை மத்திய, மாநில அரசுகள் பலமுறை பாராட்டி கௌரவித்துள்ளன. இதன் விளைவாக கலாபூசணம், மற்றும் வித்தகர் ஆகிய பட்டங்கள் உட்பட மேலும் பல்வேறு பட்டங்களையும் இவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருந்தார். இவையனைத்தையும் அவர் பெற்றிருந்தபோதும் என்றும் எங்கும் தன்னடக்கத்துடன் நிறைகுடமாகவே மக்கள் மத்தியில் வாழ்ந்து வந்தார்.

முகில்வண்ணன் அவர்களின் படைப்புக்கள் அனைத்துமே சமூகத்திற்கு படிப்பினையை ஊட்டுபவை. நவீன காலமென்று நலிந்து போகும் மக்களின் தற்கால வாழ்க்கை முறைகளை செம்மைப் படுத்திக்கொள்ள உதவுபவை ... இவை பற்றி தனது ஆக்கங்கள் பலவற்றிலும் அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

"அவள் ஒரு சாதாரண பெண்ணாக இருந்திருந்தால் எனது காதலை உனக்காக தியாகம் செய்திருப்பேன் அதில் பெருமையும் அடைந்திருப்பேன். ஆனால் சாதி வந்து கூறு போடும்போது என்னால் அதை உனக்காகக்கூட விட்டுத்தரமுடியவில்லை...."

சாதி ஒழிப்புக்கான குரலாக ..... "நீறு பூத்த நெருப்பு" (சிறுகதைத்தொகுதி)

"உன்னிடம் இப்ப யார் சீதனம் கேட்டது ? ஏன் இதையெல்லாம் எண்ணிக் கலங்குகின்றாய்"?

சீதனக் கொடுமைகள் பற்றியது.... "இராசாத்தி" (நாவல்)

"நல்ல கணவனை மணக்க விரும்பும் கன்னிப்பெண்கள் தேவியைப் பூசித்து தமது எண்ணம் ஈடேறப் பெற்றனர் என்பதற்குரிய சான்றினைப் பாகவத புராணத்திலிருந்து காணலாம்....."

ஆன்மீக அறிவுரை.... "பாவை நோன்பு" (கட்டுரை நூல்)

"கல்முனை கலை இலக்கிய நண்பர்கள்" அமைப்பின் செயலாளரான நானும் எனது (கட்டுரை ஆசிரியர்) நண்பர்கள் சிலரும் இணைந்து 2008 ஏப்ரல் மாதத்தில் பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் முகில்வண்ணன் அவர்களுக்கு பாராட்டு விழாவொன்றை நடாத்த ஒழுங்கு செய்திருந்தோம்.

"முற்றத்து மல்லிகை" என்னும் பெயருடன் மிகச்சிறப்பாக நடைபெற்ற இவ் விழாவிற்கு அமைப்பின் அப்போதைய தலைவர் அமரர்.கமலாம்பிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோகிதராஜா அவர்கள் தலைமை தாங்கியமை இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.

2017 இல் கல்முனை வடக்கு பிரதேச செயலக கலாச்சார பேரவையால் நடாத்தப்பட்ட கலைவிழா ஏற்பாட்டுக்குழுவின் உபதலைவராக முகில்வண்ணன் மிகவும் சிறப்பாக செயற்பட்டிருந்தார். அக்குழுவில் அங்கத்துவம் வகித்திருந்த நாங்கள் ஒன்றாக செயற்பட்டு அவ்விழாவினை சிறப்பாக செய்து முடித்திருந்தோம். இவ்வேளைகளில் அமைதியான சுபாவம் கொண்ட அவருள் அடங்கிக்கிடந்த தலைமைத்துவப் பண்புகளை நாங்கள் கண்டுணரக்கூடியதாக இருந்தது. நான் மேலே குறிப்பிட்டது போல அமரர்.முகில்வண்ணன் அவர்கள் தனது வாழ்க்கைக் காலத்தின் இறுதிப்பகுதியில் தனக்கென ஒரு தனி வழியை அமைத்துக்கொண்டு அதன்படி ஒழுகி வாழ்ந்து வந்திருந்தார்.

" ...சோற்றிலே விருப்பஞ் சூழ்ந்திடில் ஒருவன்
துன்னுநற் றவமெலாஞ் சுருக்கி
ஆற்றிலே கரைத்த புளியெனப் போம்என்
றறிஞர்கள் உரைத்திடல் சிறிதும் ... (திருவருட்பா)

என்பதற்கேற்ப இதன் நாளாந்த உணவுகளை ஒறுத்து "ஓம் சாந்தி" ஆன்மீக நிலையத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். உலகெங்கிலும் ஆன்மீக நெறியை பரப்பிவரும்" பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் கல்முனைக் கிளையில் நாள்தோறும் தியான வகுப்பக்களை அவர் நடாத்தியதுடன் தானும் அதில் பங்குகொண்டு ஏனையவர்களுக்கும் முன்மாதிரியாக திகழ்ந்து வந்தார்.

1942 இல் பாண்டிருப்பு மண்ணில் பிறந்த முகில்வண்ணன் அவர்களுக்கு அவரது பெற்றோர் சூட்டிய பெயர் சண்முகநாதன் என்பதாகும். அவர் அண்ணளவாக அறுபதாண்டுகள் இலக்கியப்பணி புரிந்ததன் விளைவாக அவரது பெற்றோரால் சூட்டப்பட்ட அவரது சொந்தப் பெயரை விட "முகில்வண்ணன்" என்ற அவரது புனை பெயரே அதிக பிரபல்யம் பெறத் தொடங்கியது. தற்போதைய நிலையில் இலக்கிய உலகில் திரு.வே.சண்முகநாதன் என்பவரைத் தெரியாதவர்கள் இருக்கலாம் ஆனால்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகில்வண்ணன் என்பவரை தெரியாதவர்கள் இருப்பார்களா? என்பது சந்தேகமே.....

இலக்கிய உலகம் இழப்பைச் சந்தித்துள்ளது........

அது ஈடுசெய்யப்பட வேண்டும்....

நம்மாலான முயற்சிகளை நாம் மேற்கொள்வோம்..

கடைசிவரை முகில்வண்ணனின் நினைவுகள்
நம்முடன் இருக்குமென்ற நம்பிக்கையுடன்.

யானேதும் பிறப்பஞ்சே

னிறப்பதனுக் கென்கடவேன்...

வானேயும் பெறில் வேண்டேன்

மண்ணாள்வான் மதித்துமிரேன்

றேனேயு மலர்க்கொன்றைச்

சிவனேயெம் பெருமானெம்

மானேயுன் னருள் பெறுநா

ளென்றென்றே வருந்துவனே - திருவாசகம் -

ஓம் சாந்தி .... சாந்தி......சாந்தி......

கலாபூசணம், வித்தகர்
எஸ். அரசரெத்தினம்
கல்முனை - 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுள்ளளவும் தரணியில் வாழ்வார்.!

பொதிகைமலைத் தென்றலாய்
பூத்தமலர்வாசனையாய்
நதியிலாறும் குளிர்ச்சியாய்
நன்னெறிகள் கோர்த்தெடுத்து
எதிலும் புதுமை மிளிர்ந்திட
ஏற்றவிதம் உள்ளீர்த்து
பதித்த நூல் பலவற்றால்
பார்போற்றும் முகில் வண்ணன்

தமிழென்னும் கடலினுள்
தயங்காது தினம்மூழ்கி
அமிழ்தெனும் இனிதான
அரிய படைப்புக்கள் பல
நமக்கெல்லாம் நல்கிய
நலம் சேர்முகில்வண்ணன்
இமைப்பொழுதும் எம்முன்னே
என்றும் நிழலாடுகின்றார்!

ஆன்மீக சிந்தனைகள்
அரியபல தத்துவங்கள்
வான்திகழும் மோட்சத்தை
வழங்கும் விழித்திறன்கள்
தேன்போன்று எமக்கெல்லாம்
திகட்டாது அளித்தவரோ
வான்போன்று புகழ்பெற்று
வையகத்தில் வாழ்கின்றார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித இயல்புகளை
மானுட மேம்பாட்டை
புனிதமுறும் வகைதனிலே
புதுப்பித்த மாமேதையே...
இனியும் இவர்போன்று
இங்கெமெக்கு யாருள்ளார்?
தணியாத தாகத்தைச்
தந்தெமெக்குச் சென்றுள்ளார்!

"செல்லக்கிளி" யென்னும்
சிறந்த நாவலினை
வெல்லத் தமிழ் கொண்டு
விவேகத் திறனோடு
உள்ளத்தாமரையை
உவப்பாய் மகிழ்வித்த
நல்ல படைப்பாளிதனை
நம்முள்ளம் மறந்திடுமோ?
"இனியும் நான் இராமன் தான்"
என்னும் சிறுகதைகள்
தொகுதி நூல் தன்னை
துடிப்போடு வெளியிட்டு
கணிப்பீட்டு வகையினிலே
கருத்திடத் தம்மையும்
இணைத்திட்டார் சிறுகதை
ஆசிரியர் வரிசையிலே!

விந்தையிலும் விந்தை
விரைவாக நிறைவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை நிலைநிறுத்தி
சிறுவர் ஆக்கங்கள்
வந்த ஆய்வுக்கட்டுரைகள்
வளங்கள் பெற்றிலங்க
சந்ததமும் ஓய்வின்றி
தமிழுக்காய் உழைத்திட்டார்!

தொழிநுட்ப வல்லுனராய்
தொழில் அதிபராக
மழைமுகில் மேகமாய்
மண்ணைச் செழிப்பித்த்
முகில்வண்ணனை நாம்
முன்னிறுத்திப் பார்க்கின்றோம்
அகிலம் இவருக்காய்
அன்றாடம் புகழ்சேர்க்கும்

அன்பாகப் பேசியென்றும்
அறிவோடு உரை பகன்று
இன்புற்றிருந்த எங்கள்
முகில்வண்ணன் எங்கே?
அமைந்த நற்சேவையினால்
அனுதினமும் மறையாமல்
தமிழ்மொழி உள்ளளவும்
தரணியில் வாழ்ந்திடுவார்.

பாவாணர் : அக்கரைப்பாக்கியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நிறைந்த அண்ணன் முகில்வண்ணன்

"தோன்றின் புகழோடு தோன்றுக அஃ(து) இலான்
தோன்றிலன் தோன்றாமை நன்று"

என்ற பொய்யா மொழிப்புலவர் வள்ளுவரின் குறள்போல் வாழ்ந்தவரும், எல்லோராலும் "எலக்ரோன்" என்று அழைக்கப்பட்டவரும் "முகில்வண்ணன்" என்று தமிழ் இலக்கிய உலகில் பிரகாசித்தவரும் வே.சண்முகநாதன் என்று கட்டிடத்திணைக்களத்தால் அறியப்பட்ட பொறியியளாளரும் ஆகிய, அண்ணன் முகில்வண்ணன் உண்மையான ஒரு தமிழ் தேசியப்பற்றாளர், பாண்டிருப்பு மக்களின் பொருளாதார சமய கலாசார பண்பாட்டு மறுமலர்ச்சிக்காக அவரால் தொடங்கப்பட்ட பாண்டிருப்பு பொதுச்சந்தை இன்னும் சாட்சியாக உள்ளது.

பாண்டிருப்பு மக்களின் அடையாளமாக திகழும் ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலய வருமானத்தை பிறர் அள்ளிக் கொண்டு போகாமல் ஆலயத்தின் பணிக்கே பயன்பட வேண்டும் என்ற கருத்துடன் இணைந்த இளைஞருக்கு தலைமை தாங்கி, புனரமைக்கப்பட்ட நிர்வாகத்தில் தலைவராக இருந்த அவருடன் செயலாளராகவிருந்து செய்த சேவைகள் மறக்கமுடியாதவை.

தமிழ் இலக்கியப்பரப்பில் 1960களிலிருந்து அண்மைக்காலம் வரை சிறுகதைகள், சிறுவர் இலக்கியம், கட்டுரை, கவிதைகள் ஆன்மீகம் என எழுதிக்குவித்துள்ளார். அவர் ஆக்கங்கள், தினகரன், வீரகேசரி, மித்திரன், ராதா, சுதந்திரன் என சகல பத்திரிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. இதற்குமேல் 16 நூல்களையும் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். மாபெரும் எழுத்தாளர் சண்முகம் சிவலிங்கத்தின் இவர் பற்றிய கூற்று "கோழி போல் கொக்கரிக்காமல் ஆமை போல் ஆயிரம் முட்டைகள் பொரித்துள்ளீர்களே" என்றது எவ்வளவு பொருத்தமானது.

அண்ணன் இன்று எம்மத்தியில் இல்லை, அவர் எழுத்துக்களை பரவச்செய்வதே எம்பணி.

க.இரத்தினவேல்
ஓய்வுநிலை அதிபர்,
தவிசாளர்,
பாண்டிருப்பு. அக்கரைப்பற்று தெற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் திரு சண்முகநாதனின் நினைவுகளிடையே...

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

இயற்கையின் சுழற்சியில் ஜனனமும் மரணமும் நித்தியமானவை ஜென்ம ஜென்மங்களாய் தொடரும் வாழ்க்கைச் சக்கரத்தில் நிகழ்வுகள் இவற்றைச் சாசுவதமாக்குகின்றன.

வாழும் காலப் பொழுதுகள் எமக்கான வரங்களே

திரு சண்முகநாதன் அவர்கள் எனது ஊர்ப்பிரமுகர்களில் ஒருவர், திரௌபதையம்மன் ஆலயம் மூலமாய்க் கொண்டு பாண்டிருப்பு மக்களிடையே அருச்சுனர் பரம்பரையை சேர்ந்தவர்.

ஊரில் பொதுவாக "எலக்ரோன்" என்று அழைக்கப்படுவார். பிந்தைய காலங்களில் முகில்வண்ணன் எனும் புனைப்பெயரினால் எழுத்துலகில் அழைக்கப்பட்டார்.

அமைதியும் சாந்தமும் ஒரு கீற்றுப் புனைகையும் முகத்தில் அலங்காரமாகக்கொண்டவர். சிறந்த ஆன்மீகவாதி கண்மணி அக்காவோடு எனதூரின் கோவில்களில் அடிக்கடி காணலாம். பாண்டிருப்பு ஆலயங்களின் நிருவாக சபையிலும் பதவிகள் வகித்தவர்

எல்லாவற்றிற்கும் முதன்மையாய் கலை உலகில் பல படைப்புக்களின் சொந்தக்காரர். கல்முனை கலை இலக்கிய நண்பர்கள் சார்பில் திரு சண்முகநாதன் அவர்கட்கும் திருமதி கமலினி சிவநாதன் அவர்கட்கும் பாண்டிருப்பின் படைப்பாளிகள் எனப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்ட போது மிகவும் மனமுவந்து அக் கௌரவிப்பை ஏற்றுக்கொண்டார்.

சமூகத்தில் யாருடனும் முரண்படாது உயர் பண்பாளராகவும், ஆன்மீக வாதியாகவும் வாழ்ந்த அவரின் ஆன்மா சாந்தி பெற்று இறையுடன் இணைந்திருக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

டாக்டர் புஸ்பலதா லோகநாதன்
பாண்டிருப்பு .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவுகளில்...

அது ஒரு வசந்த காலம்

பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், நூல்களும் எனது வாசிப்பின் தேடலில் அரசோச்சிய காலம்.

அப்போதுதான் முகில்வண்ணன் எனும் படைப்பிலக்கிய வாதியின் அறிமுகம் எனக்கு கிடைத்தது.

முகில்வண்ணன் ஐயா எனது நண்பர். எனது தந்தையினதும் நண்பர்.

ஒரு பேனா நண்பர் போன்று என் வாழ்வுக்குள் பிரவேசித்தவர். கதைகளைத் தேடித்தேடி வாசிக்கும் பருவத்தில் பல நூல்களையும், தனது அச்சேறிய கதைகளையும் அடிக்கடி தந்துதவியவர்.

இனிமையான மனிதர், பழகுவதற்கு எளிமையானவர். ஒரு குழந்தை போல சிரித்தபடி இருப்பவர், கிட்டத்தட்ட இருப்பத்து ஐந்து வருட கால ஸ்நேகம் எங்களுடையது.

கொழும்பில் இருந்தாலோ, வெளிநாடுகளில் இருந்தாலோ தொடர்பிலே இருப்பவர்.

எழுத வேண்டும், அவற்றையெல்லாம் நூலுருவாக்க வேண்டும் எனும் அவாவுடனே எப்போதும் காணப்படுபவர்.

எனது தந்தையின் நண்பராக இருந்தாலும், என்னை தனக்கொப்பான சக படைப்பாளியாகவே எப்போதும் பார்த்தவர். நான் சிறுகதைகள் எழுதும் போதெல்லாம் மனந்திறந்து பாராட்டுக்களையும் விமர்சனங்களையும் முன் வைப்பவர். தலைமுறை இடைவெளிகளைத் தாண்டி சக எழுத்தாளராக என்னை நடத்தியவர்.

அன்பு, கரிசனை, அறிவுரை, பாராட்டு, விமர்சனம் எனும் பல வாழ்வின் வடிவங்களை எனக்குக் காட்டியவர். நான் நேசிக்கும் நல்ல நண்பன்.

முகில்வண்ணன் ஐயாவின் படைப்புக்கள் அனைத்தையும் நான் படித்திருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வாழ்நாளில் தன்னால் முடிந்தளவிற்கு கலை இலக்கிய உலகிற்கு பங்களிப்புச் செய்த ஓர் படைப்பாளியாகவே அவரைக் காண்கிறேன்.

இலக்கிய தாகமுள்ளவராகவே வாழ்ந்தார். அதற்கு அவரது அன்புத் துணைவியாரும் பிள்ளைக்கும் போதியளவு அனுசரணை வழங்கியதாக அடிக்கடி சொல்லிக்கொள்வார். பெருமைபட்டுக் கொள்வார்.

மென்மையான சுபாவமும், இறை தேடலும் கொண்ட ஓர் கனவாகவே வாழ்ந்தார்.

வாழ்வின் முக்கிய தருணங்களில் எல்லாம் என்னோடு உரையாடுபவராக இருந்தார்.

இலக்கிய உரையாடல்களில் நான் அவரைச் சீண்டும் போது கூட என்னோடு அவர் கோபப்பட்டதில்லை " என்ர பிள்ளை போலதானே என்னத்தை யெண்டாலும் பேசு மகள்" என்று சொல்லி அமைதியாக இருப்பார். சிரிப்பார், அது ஓர் உயர்ந்த மானுட விழுமியமாக எனக்குத் தெரியும்.

என் தந்தை இறந்த போது மிக நீண்ட நேரமாக என்னருகில் இருந்து ஆறுதல் சொன்னார். அவரது அன்புத் துணைவியார் இறந்த போது அவரடைந்த துயரம் கண்டு மெய்சிலிர்த்துப் போனேன். அந்த இழப்பின் பின்னரான காலங்களில் ஐயா மாறிப்போனர். களையிழந்து போனார்.

துயரம், தனிமை அவரை வாட்டுவதை கண்டேன். பல தடவைகள் இவை குறித்து பேசினார். எழுத்தின் பால் கொண்ட ஈடுபாடு நமக்கு பல அருமையான படைப்புகளை தந்திருக்கிறது. அன்பான, பண்பான, அமைதியான, ஆன்மீகமான ஓர் அற்புத படைப்பாளியாகவே வாழ்ந்து முடித்தார்.

எனக்கான நல்ல நட்பொன்று அஸ்தமனமாகியது.

ஆத்மராஜா றூத் சந்திரிக்கா,

கோட்டைக்கல்லாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏக பத்தினியாளரை இனியும் நாம் காண்பது அரிது...

வாழ்வில் எப்படியும் வாழலாம் என்பதைவிட இப்படித்தான் வாழ வேண்டும் என்ற அடிப்படையில் வாழ்வோர்தான் ஈருலக வாழ்வின் வெற்றியாளர்கள்.

எமது பெரும் ஆளுமை மறைந்த முகில்வண்ணன் அவர்கள் இப்படித்தான் நான் வாழ்வேன் என்பதில் வாழ்ந்து காட்டிய உதாரண புருஷராக நாம் மதிக்கிறோம்.

அவரது தொழில் முயற்சியும் , வாடிக்கையாளர்களுக்கும் சேவகமாகவே செய்து வந்ததாக அறிய முடிகிறது. அவரது கலையுலக வாழ்வும், யாருக்கும் பாதகத்தினை ஏற்படுத்தாமலும் , விமர்சனங்களுக்குள் வகைப்படாமலும் உயிர் கொடுத்து வாழ்ந்து வந்தார்.

அவற்றுக்கும் மேலாக இலக்கியத்தினை பல களங்களில் தனித்து நின்று தனது ஆளுமையினை மிகச் சிறப்பாக வெளியுலகிற்கு காண்பித்திருந்தார். ஆனால் அவரது படைப்புக்களில் கனிவு,பண்பு,அன்பு காதல் கண்டோம் ஆனால் காமம், இச்சை, விரசம்,வன்முறைகள் போன்றவைகளை படைப்பிலிருந்து தவிர்த்து இருந்தமையினை சிறப்பாக பதிவிட முடியும்.

அமரர் முகில்வண்ணன் தனது குடும்ப வாழ்க்கையை மிகச் சந்தோசத்துடன் கழித்தார். தனது துணைவியாருடன் மிகவும் பணிவன்புடன் வாழ்ந்து காட்டியவர். கிராம மக்களுடன் கடனுதவி சங்கம் மூலமாக உதவிகள் செய்வதில் உளப் பூரிப்பு கண்டவர். தனது வாழ்வில் உணவு உண்ணல், நீர் அருந்துதலில் கூட தனித்துவம் நோக்கியவர். அமரர் அவர்கள் கடவுள் நம்பிக்கையிலும், கடவுள் தொண்டு செய்வதிலும் மிகவும் அபரிமிதமான திருப்தியுடன் வாழ்ந்து காட்டிய பெருந்தகை.

எமது அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவையின் கௌரவ பொருளாளராக இருந்து அளப்பரிய சேவைகளினை செய்த சிரேஷ்ட ஆளுமை இன்று எம்மை விட்டு மறைந்து சென்றாலும் அவரது நினைவுகளில் நாம் நனைகிறோம். அவரது குடும்பத்தினருக்கும் எமது பேரவை ஆழ்ந்த அனுதாபங்களினைத் தெரிவித்துக் கொள்கிறது.

தேசபந்து. ஜலீல் ஜீ
ஸ்தாபிதரும், தலைவரும்.
(அம்பாறை மாவட்ட தமிழ் எழுத்தாளர் மேம்பாட்டுப் பேரவை)
01.10.2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி நிமிடம்...

சிலரது இழப்பு சில உண்மைகளை எமக்கு உணர்த்துகின்றது. அதற்கு முன்னர் 1976 ஜனவரி 15 எனது வாழ்க்கையில் நீண்டமாற்றத்தை ஏற்படுத்தியது. எனது அம்மாவின் தம்பி பள்ளி மாமா (வேதாரணியம்) பாண்டிருப்பில் திருமணம் முடித்ததால் அவரது மனைவியின் தம்பி கணேஸ் குஞ்சப்பா (சண்முகநாதன்)

பள்ளிப்படிப்பை தொடர்ந்தவனாக கல்முனை பஜாரில் குஞ்சப்பாவின் எலக்ரோன் கடையையும் நிர்வகித்ததோடு குடும்பத்துள் ஒருவனானேன் எண் கணித சாஸ்த்திரத்தில் இருந்த ஈடுபாடே கடைக்கு எலக்ரோன் (ELECT TONE) என்றானது என்னுடன் சேர்த்து ஐவர் கடையில் இருந்தோம்.

சண்முகநாதன் என்ற பெயரை அலுவலகத்திலும் அவரைச்சார்ந்த சிலருக்குமே தெரியும். கல்முனை பஜாரிலும் கடை சார்ந்தவர்களுக்கும் எலக்ரோன் எலக்ரோன்ஐயா உறவுகளுக்கும் ஊர் சார்ந்த சிலருக்கும் கணேஸ் இலக்கிய துறை சார்ந்தவர்களுக்கும் இன்றைய நிகழ்விலும் முகில்வண்ணன்.

நற்பிட்டிமுனை வீதி பழைய மின்சார நிலையத்திற்கு முன்பாக இருந்த வீட்டில் இருந்து 1977ல் பாண்டிருப்பில் வீடு கட்டிகுடியேறி இருந்தோம். 1978 மார்கழியில் பாரிய சூறாவளி வீசியதால் கல்முனை பஜாரில் இரவு நேரங்களில் உடைமைகளை காப்பாற்ற உரிமையாளர்கள் சிரமப்பட்ட போது குஞ்சப்பாவின் ஆலோசனைக்கமைய எலக்ரோன் மின்சார இயந்திரம் மூலம் முடிந்தளவு பஜாருக்கு மின்சாரம் வழங்கியதையும் நினைத்துப் பார்க்கின்றேன்.

மக்கள் மனதில் மாற்றம் வர வேண்டுமென்ற நோக்குடன் 1979 ஜனவரி பூரணை தினத்தன்று "பௌர்ணமி நிலவுத்தென்றல்" என்ற பாரியதொரு இசை நிகழ்ச்சி இவரது ஆலோசனைக்கமைவாக நடைபெற்றது. தலைமையை தான் ஏற்றதுடன் பிரதம அதிதியாக அன்றைய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு.லக்சி அபயசேகர கலந்து சிறப்பித்ததையும் மறக்க முடியாது.

1982களில் எலக்ரோனில் நேர்முகப் பரீட்சை நடாத்தி பலரை நேரடியாக சவூதிக்கு அனுப்பியதோடு தானும் உயர்பதவி ஒன்றுடன் சவூதிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு வருட நோயேயில் சென்றவர் 1983 யூன் மாதம் 45 நாள் விடுமுறையில் வந்தவருக்கு யூலைக்கலவரத்தால் திரும்ப செல்ல முடியவில்லை.

கொழும்பில் சில காலம் "ரோகினி என்ற பிறைஸ்" பெயரில் வெளிநாடுகளுக்கு பொதிசெய்த உணவு பொருட்களை அனுப்பி வருமானத்தை பெற்று வந்ததோடு "பிரம்மகுமாரிகள் ராஜயோக" நிலையத்துடன் பல சேவைகளையும் அவரால் செய்ய முடிந்தது.

கண்மணி அன்ரியை காதலித்து கரம் பிடித்தது மட்டுமல்லாது நான் விரும்பிய அவரின் அக்கா மகளையே எனக்கு திருமணம் செய்து வைத்தார். எனது மூத்த மகள் லாணியை பெற்றது நாங்களாக இருந்தாலும் வளர்த்தது அன்ரி குஞ்சப்பா குடும்பமே லாணி திருமணம் முடித்து அவளது குழந்தை வயிற்றில் இருந்த போதே ஆண் குழந்தை என அறிந்து கவிதை எழுதி கொடுத்து கண்கலங்க வைத்தவர்.

எனது மூன்று பிள்ளைகளினதும் (லாணி, கிச்சு, நிலு) திருமண நிகழ்வுகளிலும் அவர்களது ஆலோசனைகளும் ஆசிர்வாதங்களும் அளப்பெரியது.

அன்ரியின் மறைவுக்குப் பின்னர் குஞ்சப்பா வாழ்க்கை தடம்மாறியது சோகத்தை வெளியே காட்டவில்லை சொல்லி அழுதிடவும் விரும்பவில்லை அன்ரியைப் பிரிந்து 669 நாட்கள் வாழ்ந்த குஞ்சப்பா எனக்காக இன்னுமொரு முகவரியை தேடித்தந்தவர்.

புஸ்பராணியின் ஒரு கப் பாலுடன் மாமா மாமா என்ற ஒலியும் அவரின் கடைக்குட்டி சரேனின் கைப்பேசி கமரா ஊடாக அப்பா அப்பா என்ற சத்தமும், ஜனாவின் அப்பா அப்பா அழுகையுடனும், அவரின் ஆத்மா இறையுடன் சங்கமித்ததை அவதானித்த எனக்கு சிலரது கடைசி நிமிடம் சில உண்மைகளை எனக்குள் உணர்த்தியது நானும் என்றோ ஒரு நாள் உங்களுடன்...

ஓம் சாந்தி

என்றும் உங்கள்

பால்வாவா

(பாசம்புவி, பாண்டிருப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகா

சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பதஞ்சலி முனிவரால் உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட உன்னதமான, உடல் உள ஆரோக்கியத்தோடு ஆன்மீக விருத்தியையும் தரக்கூடிய ஒப்பற்ற தெய்வீகக் கலை தான் யோகம். விஞ்ஞானத்தாலும் கண்டுபிடிக்க முடியாத,பல நுட்பங்களையும்,பல அபூர்வ சக்திகளையும் உள்ளடக்கியதாக,மனிதவாழ்வின் மேம்பாட்டுக்கு உதவுவதாக ,அமைந்துள்ளமை இதன் சிறப்பம்சமாகும்.

மனம், உடல் இவைகளை உறுதிப்படுத்தக் கூடியதாகவுள்ள யோகம் கர்மயோகம் பக்தி யோகம், ராஜயோகம், ஞான யோகம் என நான்கு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் எட்டு படிகள் காணப்படுகின்றன. அவைகளை சுருக்கமாக இயமம் --அஹிம்சை. நியமம் -- உடல் உளத்தூய்மை. ஆசனம்-- ஆரோக்கியத்திற்கான இருக்கைகள். பிராணாயாமம்-- மூச்சை ஒழுங்குபடுத்தி ஆரோக்கியத்தையும் ஆயுளையும் நோய் எதிர்ப்பு சக்தியையும் கூட்ட செய்கின்ற பயிற்சி. பிரத்தியாகாரம்-- மனதினை பிற இடங்களில் செல்லாது தடுப்பது. தாரணை-- மனதை ஒருநிலைப்படுத்துவது. தியானம் --ஒரு நிலைப்படுத்திய மனதை அதே நிலையில் லயித்துப் போகச் செய்வது. சமாதி-- இறையோடு ஐக்கிய படுதல்.

யோகம் செய்வதால் மன அமைதி,மன மகிழ்ச்சி, மனத்தூய்மை,மன உறுதி,பொறுமை, சகிப்புத்தன்மை,அன்பு, கருணை, திறமை, ஒருங்கிணைப்பு, பேரானந்தம், முகமலர்ச்சி, உண்டாக்குவதோடு, பல நோய்களினின்று விடுபட்டு,எப்பொழுதும் உற்சாகமாகவும், ஆரோக்கியமாகவும் வாழலாம்.

மாணவர்களைப் பொறுத்தவரையில் யோகா செய்வதினால் சோம்பல் அகற்றப்பட்டு மன ஒருமைப்பாடு, நுண்ணறிவு விருத்தி, ஞாபக விருத்தி, ஆன்மீக விருத்தி, என்பன ஏற்படுவதோடு உடல், உள விருத்தியும் ஏற்படும். சிறந்த யோகா ஆசிரியரிடம் யோகாவைப் பயிலும் பொழுது அதன் முழு பயனையும் அடையலாம். இன்று உலக நாடுகள் அனைத்தும் ஏக மனதாக ஜூன் 21ஆம் திகதியை யோகா தினமாகக் கொண்டாடுவது அதன் பெருமையையும் சிறப்பையும் பறைசாற்றுவதோடு மக்களுக்கு விழிப்புணர்வையும் உண்டாக்குவதாக அமைகின்றது.

யோகா நிபுணர், கலாபூசணம், தேசபந்து கா.சந்திரலிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

01.வெண்டா மரைக்கன்றி நின் பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ சக மேழு மளித்து
உண்டா னுறங்க வொழித்தான் பித்தாக வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகலகலாவல்லியே.

02.நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர, நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே சகலகலாவல்லியே.

03.அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோ வுளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகலகலாவல்லியே.

04.தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும், பெருகப் பணித்தருள்வாய் வடநூற்கடலும்
தேக்குஞ் செந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந்நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகலகலாவல்லியே.

05.பஞ்சப் பிதந்தரு செய்ய பொற் பாத பங்கேருகமென்
நெஞ்சத் தடத் தலராத தென் னெநெடுந் தாட்கமலத்து
தஞ்சத் துவச முயர்த்தோன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகலகலாவல்லியே.

06.பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது தெளிதெய்த நல் கா யெழுதாமறையும்
விண்ணும் புவியும் புனலுமங் கனலும், வெங்காலு மன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகலகலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07.பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனு மென்பாற்
கூட்டும்படி நின் கடைக்கணல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோ திமப்பேடே சகல கலாவல்லியே!

08.சொல் விற்பனமு மவதான முங் கல்வி சொல்லவல்ல
நல்வித்தையுந் தந்தடிமை கொள்வாய் நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதென்றொரு காலமுஞ் சிதையாமை நல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகலகலாவல்லியே.

09.சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலம் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாளே சகலகலாவல்லியே.

10.மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே!

- குமரகுருபர சுவாமிகளால் அருளப்பட்டது -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்காக யாரும் அழ வேண்டாம்!

எனக்காக யாரும் அழ வேண்டாம்! இனிய இறைவன் தன்னோடு என்னை அழைக்கும் போது, எனக்காக யாரும் அழ வேண்டாம்!

அன்னை தந்தை அவர் வழியில், அடியேன் செல்லும் போது அலறி புலம்பி அழவேண்டாம்!

அவரிடமிருந்து வந்தவன் - நான், அழுகிடும் உடலை கடனாய் பெற்றவன்!

அயலவர் உங்களை உறவாக்கி, எழுபத்தொன்பதாண்டுகள் வாழ்ந்து விட்டேன்!

தன்னோடு மீண்டும் வரும்படி கேட்டால் - மறுக்கும் தார்மீக உரிமை எனக்கில்லை இறைவன் என்னை அழைப்பதற்குள் இனியொரு பிறப்பு எடுப்பதற்குள்!

இந்தக் கணக்கை முடிப்பதற்கு இங்கே முயற்சி எடுக்கின்றேன்!

ஆத்மா நானென உணர்ந்து கொண்டேன்! அதற்கு விடுதலை வேண்டி நின்றேன்!

'அவரே' வருவர் எனை அழைக்க! அழுது புலம்பி தடுக்க வேண்டாம்!

சொன்ன கதைகள் - சுடும் சொற்கள் சொல்லி யாரும் அழவேண்டாம்!

முன்னம் செய்த தவறுகள் முழுவதும் மறந்து மன்னிக்க!

பந்தம் தந்த சோதரிகள்! பதறி அழுதிடும் மருமக்கள்! சொந்தம் கொண்ட பேரன் பேத்தியர் மக்கள் இனித்திடும் மச்சான்மார்! மறந்து போன உறவுகள்! ஒன்று கூடிச் சேர்ந்திருங்கள்! ஓயாது புலம்பி அழவேண்டாம்!

ஊரை விட்டுச் சென்று விட்ட உறவுகள் கவலைப் படவேண்டாம்! யாரும் யாரை தேற்றியென்ன? ஊரோடு உறவாய் இருந்தால் போதும்! ஒன்றாய் உங்களுடன் சேர்ந்திருந்து ஒரு பொழுதேனும் - நன்றாய் வாழ்ந்த நினைவுடனே! நானும் செல்ல நினைக்கின்றேன்! நன்றே எனை விடை அனுப்பயா(வ)ரும் கூடி அழ வேண்டாம்!!

முகில்வண்ணன் வே. சண்முகநாதன்

(22.11.2001 ஆம் திகதி தனக்காக எழுதிய கவிதை இது)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்முனை நெற் ஏற்பாட்டில் முகில்வண்ணன் அவர்களின் மூன்று நூல்கள் வெளியீட்டு நிகழ்வு!

நாடறிந்த பிரபல எழுத்தாளர் கலாபூசணம் வித்தகர் முகில்வண்ணன் வே.சண்முகநாதன் எழுதிய மூன்று நூல்களின் வெளியீட்டுவிழா கல்முனை சரவணாஸ் ஜுவலர்ஸ் அனுசரணையில் கல்முனை நெற் ஊடக வலையமைப்பின் ஏற்பாட்டில் கல்முனை உவெஸ்லி பாடசாலை மண்டபத்தில் கல்முனை தமிழ்ச்சங்கத்தலைவர் பரதன்கந்தசாமி தலைமையில் 2017-மார்ச்-12 இல் நடைபெற்றது.

இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.கோடீஸ்வரன் கௌரவ அதிதிகளாக கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான மு.இராஜேஸ்வரன் த.கலையரசன் ஆகியோரும் முன்னால் கல்முனை மாநகரசபை உறுப்பினர்கள் பாடசாலையின் அதிபர்கள் பிரதி அதிபர்கள் எழுத்தாளர்கள் கிராமப் பெரியார்கள் என பலரும் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் ஆய்வுரையை உதவிக்கல்விப் பணிப்பாளர் வீ.ரீ. சகாதேவராஜாவும் வரவேற்புரையை பாண்டிருப்பு மறுமலர்ச்சி சனசமூக நிலையத் தலைவர் பீ.எஸ். புவிராஜாவும் நூல் ஏற்புரையை நூலாசிரியர் முகில்வண்ணனும் நன்றியுரை கல்முனை நெற் ஊடக வலையமைப்பு சார்பாக கோ. பிரசாந் ஆகியோரும் நிகழ்த்தினர்.

இந்துக்கலாசார திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட சமயப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதல் இடம் பெற்ற பாண்டிருப்பு கலைவாணி அறநெறிப் பாடசாலை மாணவி செல்வி நாகரெத்தினம் தீபிகாவும் இந் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார்.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசார பேரவையின் ஏற்பாட்டில் முகில்வண்ணன் அவர்களின் மூன்று நூல்கள் வெளியீட்டு நிகழ்வு!

கல்முனை தமிழ் பிரதேச செயலக கலாசார பேரவையின் ஏற்பாட்டில் கல்முனைப் பிரதேச மூத்த எழுத்தாளர்கள் வரிசையில் தனக்கென தனி இடம் பிடித்தவரான வித்தகர் கலாபூசணம் முகில்வண்ணன் அவர்களின் மூன்று நூல்கள் வெளியீட்டு விழா கல்முனை தமிழ் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலாளர் எஸ்.கே. லவநாதன் அவர்களின் தலைமையில் 2017 இல் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முகில் வண்ணன் அவர்களுடைய சிறுவர் நூல் - இளவரசன் நாவல் - இராசாத்தி சிறுகதை நூல் - மனுஷ்யா ஆகிய மூன்று நூல்கள் வெளியீட்டு வைக்கப்பட்டன.

இந்நிகழ்வின் முதற் கட்டமாக பிரதேச செயலாளர் திரு. எஸ். கே.லவநாதன் அவர்கள் தனது தலைமையுரையுடன் கூடிய வரவேற்பு உரையினை நிகழ்த்தினார். தொடர்ச்சியாக, நூல்களிற்கு அணிந்துரை வழங்கிய சிரேஸ்ட ஊடகவியலாளர் விபுலமாமணி தேசமான்ய வி.ரி.சகாதேவராஜா மற்றும் பைந்தமிழ் குமரன் ஜெ. டேவிட் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை தொடர்ந்து வித்தகர் கலாபூஷணம் மு.சடாட்சரன் அவர்களும் கலாநிதி பரதன் கந்தசாமி அவர்களும் நூல் வெளியீட்டு உரைகளை நிகழ்த்த தொடர்ச்சியாக முகில் வண்ணன் அவர்களின் நூல்கள் வெளியிடப்பட்டன. மூன்று நூல்களின் முதற் பிரதியினையும் பிரதேச செயலாளர் பெற்றுக்கொண்டார். முகில் வண்ணன் தனது ஏற்புரையினை நிகழ்த்தினர். இறுதியாக கலாசார உத்தியோகத்தர் திரு.த.பிரபாகரன் அவர்களின் நன்றியுரையோடு இனிதே நிகழ்வு நிறைவுற்றது.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Shri bharathi
## ஸ்ரீ பாரதி அச்சகம்


தேமதுரத் தமிழோசை உலக மெல்லாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்
- பாரதி

# மலரஞ்சலி

பன்முக ஆளுமை கொண்ட அமரர் முகில் வண்ணன் அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்று.

அவர் எழுதி பத்திரிகைகளில் வந்த ஆக்கங்களின் ஊடாகவும் அவரின் எழுத்துக்களுக்கு கைகொடுத்து ஊக்கமளித்து வாசகர்களுக்கு சென்று அடையும் வகையில் நான் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் அவரது எழுத்துக்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற நோக்கில் அவள் ஒரு தமிழ்ப்பெண், ஆனந்தக் கண்ணீர் என்னும் இரு நாவல்களை நான் பதிப்பித்துக் கொடுத்திருக்கின்றேன். இவைதான் அவர் எழுதி வெளியிடப்பட்ட முதல் நாவல்கள். அதன்பின்னரும் அவர் பல நாவல்களை வெளியிட்டிருக்கின்றார்.

புத்தகங்கள் மனிதர்களால் படைக்கப்படுகின்றன. அவை மனிதர்களாலேதான் வாசிக்கப்படுகின்றன. நல்ல புத்தகங்கள் காலத்தை வென்று நிலைத்து வாழுகின்றன. யுகம் யுகமாக போற்றிப் பாதுகாக்கப்படுகின்றன.

புத்தகம் இல்லாத வீடு ஜன்னல் இல்லாத அறை போன்றது. எந்த வீட்டில் நூலகம் இருக்கிறதோ அந்த வீட்டில் ஆன்மா இருக்கிறது என மொழிந்தார் சிந்தனையாளர் பிளேட்டோ.

இன்று அமரர் முகில் வண்ணன் அவர்கள் இலங்கையில் பேசப்படும் எழுத்தாளர்களில் ஒருவராக விளங்கி நிற்கின்றார். அவர் மறைந்தாலும் அவரின் எழுத்துக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும்.

அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும் எனது நண்பருமான அவரின் மகன் பிரேம் நந்தகுமாருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஞாபகார்த்தமாக இந் நினைவு மலரை வெளிக்கொணரும் கல்முனை நெற் உரிமையாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இரா. [illegible]**
ஸ்ரீ பாரதி அச்சகம்
பிரான்ஸ்


18, Rue Cail - 75010 Paris | Tél : 01 42 05 46 04
E-mail : shribharathipress@gmail.com | www.shribharathi.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலிகைகளின் மகிமைகள்

| பொடியின் பெயர் | பயன்கள் |
|---|---|
| 01. வெள்ளறுகுப்பொடி | மாதவிலக்கு, வாதம், மூட்டு பிடிப்பு, நரம்புக் கோளாறு, சொறி சிரங்கு, தோல்வியாதிகள், விசக்கடிகள் நீங்கி நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கும். |
| 02. நாயுருவிப்பொடி | பெண்களின் ருதுகாலக் கோளாறுகள், காமாலை, உடல்சூடு, மூலம், இருமல் நீங்கும். |
| 03. தொட்டாச் சுருங்கிப் பொடி | சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் நீக்கும் மூலிகை இது. இரத்தத்தை விருத்தியடையச் செய்யும். |
| 04. மருதோன்றி இலைப் பொடி (வெளிப்பிரயோகம்) | கைக்கு பற்று இட உடல் சூடு குறையும், தேங்காய் எண்ணையில் காய்ச்சி வடிகட்டித் தலைக்கு தேய்த்து வர முடி செழித்து வளரும். |
| 05. கஸ்தூரி மஞ்சள் பொடி | உடம்பிற்கும், முகத்திற்கும் தேய்த்துக் குளிக்கலாம். தேமல், கரும்புள்ளி, முக வறட்சி, முகப்பரு, கற்றாழை நாற்றம் நீங்கும். |
| 06. கருவேலம் பொடி | வாய் நாற்றம், பல் கூச்சம், பல்வலி, ஈறு வீக்கம் நீங்கி பல்வலிமையடையும். |
| 07. அரச இலைப் பொடி | கர்ப்பப்பை நோய்கள் நீங்கும். |
| 08. நீலநொச்சி பொடி | வாதம், இறைப்பு, தலைவலி, கல்லீரல் நோய், உடல்வலி, குளிர் காய்ச்சல் நீங்கும். |
| 09. ஆவாரை இலைப் பொடி | சிறுநீரில் உள்ள சர்க்கரையை குறைக்கும். வெள்ளை, உடல்சூடு, நீக்கும். அதி மூத்திரத்தைக் கட்டுப்படுத்தும். |
| 10. பெரு நெருஞ்சிப் முள் பொடி | சிறுநீரகத்தில் கல்லடைப்பு, எரிச்சல், வெண்புள்ளி, எலும்புருக்கி நோய் நீக்கி சிறுநீர தாது பலம் பெருகும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பொடியின் பெயர் | பயன்கள் |
|---|---|
| 11. வெந்தையப் பொடி | சர்க்கரை நோய், மேக நோய், பித்தம், உடல்சூடு நீங்கி ஆண்மை சக்தி அதிகரிக்கும். |
| 12. சுண்டை வற்றல் பொடி | காசம், மார்ச்சளி, ஆஸ்துமா, பசியின்மை, வயிற்றுப்பூச்சிகள், மலக்கிருமிகள் நீங்கும். |
| 13 செம்பருத்திப் பூ பொடி | இதய பலவீனம், உடல்சூடு, கல்லீரல் நோய்கள், வெள்ளைப்படுதல், மூத்திரக் கோளாறுகள் நீங்கி உடலைப் பொன் நிறமாக்கும். |
| 14. மணத்தக்காளிக் கீரைப் பொடி | வாய்ப்புண், குடல்புண், உடல்சூடு போக்கி உடலுக்கு குளிர்ச்சி தரும். |
| 15. அதிமதுரப் பொடி | மார்பு வறட்சி, தொண்டைக் கரகரப்பு, நரம்பு வியாதிகள், விக்கல், இருமல் போக்கி இளைத்த உடலைத் தேற்றும். |
| 16. விஷ்ணு காந்தி | நரம்புத் தளர்ச்சியை சீர் செய்யும், கோழை, வாதம், உடல்சூடு நீக்கும். |
| 17. பெரியா நங்கை | பித்த ரோகம், மலபந்தம், விசக் கடிகள் நீங்கும். |
| 18. வேப்பம்பூ பொடி | பித்தம், மலக்கிருமிகள் உடல் வலிகள் நீங்கி நல்ல சுகம் தரும். |
| 19. முசுமுசுக்கைபொடி | பித்தம், சளி, இருமல், கோழை, இரைப்பு, நெஞ்சுவலி நீக்கும். |
| 20. அகத்தி இலைப்பொடி | எலும்புகளுக்கும். பற்களுக்கும் வலிமை சேர்க்கும். சுண்ணாம்புச் சத்து, வைட்டமின் ஏ சத்து உள்ளது. பால் சுரப்பு அதிகரிப்பு, மலச்சிக்கல், வாய்வு கோளாறு நீக்கி மூளையைப் பலப்படுத்தும். |
| 21. மஞ்சள் கரிசலாங் கண்ணிப்பொடி | காமாலை. கல்லீரல் நோய், பல் ஈறு நோய்கள் நீங்கி உடலுக்கு நல்ல நிறத்தையும் தரும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பொடியின் பெயர் | பயன்கள் |
|---|---|
| 22. குப்பைமேனிப் பொடி | சொறி, சிரங்கு, தோல் வியாதி, கீரிப்புழுவால் ஏற்படும் வயிற்றுவலி போக்கும். |
| 23. துளசிப் பொடி | சளி, இருமல், தும்மல் போக்கும். |
| 24. முடக்கற்றான் பொடி | மூட்டு வலி, முழங்கால் வலி, இடுப்பு வலி நீக்கும். |
| 25. ஓரிதழ் தாமரைப் | நரம்புத் தளர்ச்சி, வெள்ளை, வெட்டை மலட்டுத் தன்மை. ஆண்மை குறைவு நீங்கும். |
| 26. சுக்குப்பொடி | வாதம். சுவாசக் கோளாறு, மார்பு எரிச்சல், வாய்வு. புளி ஏப்பம், வயிற்றுப் பொருமல், இறைப்பு காய்ச்சல் நீங்கி சுகம் தரும். |
| 27. நெல்லிக்காய் வத்தல் | இதை பாக்குப்போடுவதுபோல் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். வைட்டமின் சி சத்து உள்ளது. மது, புகை, பாக்கு போடும் பழக்கம் உள்ளோர் இதை உபயோகப்படுத்தி இந்த கெட்ட பழக்கங்களிருந்து விடுபடலாம். |
| 28. நெல்லிக்கனிப் பொடி | வாதம், பித்தம், கபம். தலைவலி, தோல், பல், கண்நோய், சர்க்கரை நோய் போக்கி முடிவளர்ச்சி தாதுபலம் தரும். |
| 29. அத்தி இலைப்பொடி | சர்க்கரைநோய், மலட்டுத்தன்மை, குடல் புண், உடல் சூடு, பெரும்பாடு, ஆசனக்கடுப்பு நீங்கி இரத்த விருத்தி உண்டாகும். |
| 30. வாழைத்தண்டுப்பொடி | சிறுநீரகக் கற்களைக் கரைக்கும். வயிற்றுப் பூச்சிகள், குடல்புண் நீங்கி கொழுப்புச்சத்து குறையும் |
| 31. நிலப்பனங்கிழங்கு பொடி | மூத்திரச்சூடு, வெள்ளை வெட்டை, குட்டம், வாதம் நீங்கி விந்து உற்பத்தி, அதிக நேர உறவு ஏற்படும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பொடியின் பெயர் | பயன்கள் |
|---|---|
| 32. பூலாங்கிழங்கு பொடி (வெளிப்பிரயோகம்) | இந்தப் பொடியுடன் பாசிப் பயறு, கோரைக் கிழங்கு, கஸ்தூரி மஞ்சள் கலந்து முகம் மற்றும் உடம்புக்கு தேய்த்து குளிக்க கற்றாழை நாற்றம் நீங்கி உடல் மிருதுவாகவும், நறுமணம் மிக்கதாகவும் இருக்கும். |
| 33. முருங்கை இலைப் பொடி | இரும்புச் சத்து அதிகமுள்ள மூலிகை இது உடலுக்கு வலிமை தரும். ஆண்மை சக்திக்கு மிகச் சிறந்தது. |
| 34. கற்பூரவல்லி பொடி | காசம், அம்மைக் கொப்புளம் கபம், மார்ச்சளி, வாதம் நீங்கும். |
| 35. ஆலம் விதைப்பொடி | நரம்புத்தளர்ச்சி நீங்கி, உடல் திடகாத்திரமாக இருக்கும். விந்து கெட்டிட்டு அரசவிதை. ஆலவிதைப் பொடி சேர்த்து சாப்பிட்டால் கூடுதல் பலன் கிடைக்கும் |
| 36. அமுக்கரான் கிழங்கு பொடி | நரம்பு தளர்ச்சி நீங்கி இரத்த ஓட்டம் சுறுசுறுப்பு, தாதுபலம் தரும். |
| 37. வேலிபருத்திப் பொடி | வாய்வு, குடைச்சல், நடுக்கம். கர்ப்பப்பை கோளாறுகள், வயிற்றுப் புழுக்கள் நீங்கி நல்ல பசி உண்டாகும். |
| 38. ஆவாரம் பூ | உடல் சூடு குறைக்கும், சர்க்கரை நோய் கட்டுப்படும். உடல் பொன்னிறமாக்கும். வியர்வை நாற்றம் நீங்கும். |
| 39. முல்தானி மெட்டி (வெளிப்பிரயோகம்) | முகத்தில் எண்ணெய் வடிதல், கரும்புள்ளிகள், முகப்பரு, மங்கு ஆகியவை நீங்கும். |
| 40. சிகப்பு சந்தனத்தூள் | கருப்பு தேமல், முகப்பரு, முகசுருக்கம், உடல்சுருக்கம், வரித்தழும்புகள் நீங்கும் ஆண் - பெண் இருபாலரும் பயன்படுத்தலாம். |
| 41. மதுமேக சூரணம் (சர்க்கரை நோய்) | சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு மிகச் சிறந்த மூலிகைகள் அடங்கிய உணவு. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பொடியின் பெயர் | பயன்கள் |
|---|---|
| 42. சீந்தில் கொடி இலை பொடி (சஞ்சீவி மூலிகை) | சர்வ மேகம், சர்க்கரை வியாதி, ரத்த பித்த ரோகம், சுரம், சர்வ விசம் நீங்கும். தொடர்ந்து சாப்பிட்டால் நீண்ட ஆயுள் கிடைக்கும். |
| 43. தாது விருத்தி சூரணம் | ஆண்மை குறைவு, உடல் சோர்வு, இடுப்பு வலி, புணர்ச்சியில் வலுவின்மை, நரம்புத் தளர்ச்சி நீங்கி உடலைத் தேற்றும். |
| 44. அவுரி இலைப்பொடி | காமாலை நோய்கள், விசக்கடிகள், வெண் புள்ளி, தோல்வியாதிகளுக்கு சிறந்தது. |
| 45. வேம்பு பல்பொடி (வெளிப்பிரயோகம்) | வாய் நாற்றம் போக்கி வாயில் உள்ள கிருமிகளை அழிக்க வல்லது. |
| 67 வேப்பம்பட்டை பொடி | சதை நரம்புகளை சுருங்கச் செய்யும் உடல் பலம் தரும். பித்தநீர் பெருக்கும் காய்ச்சல் போக்கும், நுண்புழுக்கொல்லும் என மருத்துவ நூல் கூறுகிறது. |
| 68. அருகம்புல் பொடி | இரத்த சுத்தி, உடலுக்கு அழகு, உறுதி, மூளைக்கு குளிர்ச்சி தரும். |
| 69. கோரைக்கிழங்கு பொடி (வெளிப்பிரயோகம்) | உடல் கட்டுக் கோப்புக்கும். அறிவு வளர்ச்சிக்கும் மிகச் சிறந்தது. குன்மம், அஜீரணம், குடல்பூச்சி, குஷ்டம் நீங்கும். |
| 70 அரசம்பட்டை பொடி | உடல்சூடு, சரும நோய், அதிதாகம் நீங்கும். |
| 71. கருஞ்சீரகம் | வயிற்றுப் பொருமல், மார்பு வலி, இருமல், வாந்தி, விக்கல், கண் நோய், சிரங்கு நீங்கும் மண்டைப் கரப்பான் புண்களை ஆற்றும். |
| 72. வில்வபழப் பொடி | மூளைக் கோளாறுகளுக்கு மிகச் சிறந்தது. மயந்தம். இரத்த பேதி, கண் எரிச்சல் போக்கி உடலை நல்ல கட்டமைப்பும், வசீகரமும் பெறும். உடல் தேற்றவும் பயன்படும். |
| 73. வல்லாரப்பொடி | ஞாபகசக்தி, இரத்தவிருத்தி. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 74. ஆடாதோடைப் பொடி | சளி, இருமல், ஆஸ்மா போக்கி குரல் வளம் உண்டாகும். |
| 75. தூதுவளை பொடி | சளி, இருமல், தும்மல், கண் நோய்கள் போக்கி தாது பலம், ஞாபக சக்தி அபிவிருத்தி. |
| 76. சோற்றுக்கற்றாலை பொடி | சிறுநீரகக் கோளாறுகள், உடல்சூடு நீங்கி ஆண்மை நீடிக்கும். |
| 77. கல்யாண முருங்கை | சிறுநீர் பெருக்கி, மலமிளக்கி, தாய்ப்பால் பெருக்கி, மாதவிலக்குத்தூண்டல், கர்ப்பபை குறை நீக்கி, கோழையகற்றியாகவம், குடல் பூச்சி கொல்லியாகவும் செயல்படுகிறது. |
| 78. நிலவேம்பு பொடி | காய்ச்சல் அகற்றுதல், பசி உண்டாதல் தாது பலப்படுத்துதல், |
| 79. தாளிசபத்திரி | இருமலுக்கு நல்ல மூலிகை இது. இரைப்பு, வாந்தி, ஓங்காளம். விக்கல், காய்ச்சல், காசம் ஆகியவை நீங்கும். |
| 80. திரிகடுக சூரணம் | இருமல் கரம், வயிற்றுப் பொருமல் வயிற்று வலி, பசியின்மை. செரியாமை நீங்கும். |
| 81. வாகைப்பட்டைப்பொடி | வாத நோய்களுக்குச் சிறந்தது. |
| 82. பூனைக்காலி விதை | நரம்புத் தளர்ச்சி, ஆண்மை குறைவு நீங்கும். விந்து அணுக்களைப் பெருக்கும். |
| 83. பூமிச்சர்க்கரைக் கிழங்கி | மேகம், மூலம், சுரம், உடல்சூடு, வெட்டை நீங்க ஆண்மை விருத்தி ஆகும். விந்துவைப் பலப்படுத்தும் |
| 74. அசுவகந்திப் பொடி | சோர்வு, அசதி, கர்ப்பப்பை கோளாறு நீங்கும். ஆண்மை சக்தி |
| 75. பொன்னாங்கன்னிப் பொடி | கண் நோய், உடல் சூடு நீக்கி உடல் குளுமையும், தலை முடி வளர்ச்சியும் ஏற்படும். |

- ஆரோக்கியா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிப் பூக்கள்

கல்முனை நெற் ஊடக
வலையமைப்பின் இயக்குனர்
சபை உறுப்பினராக, ஆரம்ப
காலம் முதல் எங்களோடு கைகோர்த்து
பயணித்த இலக்கியவியலாளர்
அமரத்துவமடைந்த அமரர் வே.சண்முகநாதன்
(முகில்வண்ணன்) அவர்களுக்கு ஒரு
நினைவு மலரினை வெளியிட்டு
நினைவேந்தல் நிகழ்வையும் நடாத்துவதென
கல்முனை நெற் குழுமம் தீர்மானித்திருந்தது.
அதற்கமைய நினைவு மலருக்கான
ஆக்கங்களை தந்துதவிய அனைவருக்கும்
மலருக்கான நிதிப்பங்களிப்பை செய்த
அமரர் முகில்வண்ணனின் பிள்ளைகளுக்கும்
மலர் சிறப்பாக உருவாக பூரண ஒத்துழைப்பு
வழங்கிய மலர்க் குழுவுக்கும், சாய்ந்தமருது
றோயல் அச்சகத்தினருக்கும் 31 ஆம்
நாள் நினைவேந்தல் நிகழ்வில்
பங்குபற்றிய அனைவருக்கும்
கல்முனை நெற் ஊடக
வலையமைப்பின்
நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓம் சாந்தி

"வாழ்க்கை என்ற நாடகம் தனக்கென்றே
உரித்தான கதையைக் கொண்டுள்ளது.
ஒவ்வொரு நிகழ்வும் தனிப்பட்டது.
ஒவ்வொரு தருணமும் அனைத்திலும் மிக
முக்கியமானவை என்று வாழுங்கள். நீங்கள்
அமைதியை அனுபவித்து, உணருவீர்கள்.
உங்கள் ஆத்மாவையும் அதனுள் பொதிந்து
கிடக்கும் பொக்கிஷங்களையும் கண்டு பிடியுங்கள்."

உங்கள் ஆத்மா
அமைதியால் நிறைந்துள்ளது !

உங்கள் ஆத்மா
அமைதியானது !

கல்முனை NET
kalmunainet.com
உண்மையின் முகம்

றோயல் - சாய்ந்தமருது | 0777 488 477

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org